# வலு

ஏப்பிரல் - ஜூன் 2017 காலாண்டிதழ் இதழ் - 14

யாழ் மாநகரசபை ஆணையாளருடனான நேர்காணல்

கருவி ஆண்டு விழா சிறப்பிதழ்



## தரணியில் உயர்ந்த தற்சிந்தனையாளர்

கருவி
மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம்

# கருவியின் தடங்கள்










இதழ் 14

# வலு

ISSN : 2513 - 2989 ISBN : 978 - 955 - 23 - 0019 - 3

ஏப்ரல் - யூன் 2017

**மாற்றுத் திறனாளிகள் தொடர்பான தகவல்களை தாங்கி வெளிவரும் காலாண்டு சஞ்சிகை**

பிரதம ஆசிரியர்

**திரு.க.தர்மசேகரம்**

நிர்வாக ஆசிரியர்

**நா.கீதாகிருஷ்ணன்**

**karuvivalu@gmail.com**

**T.P 076 6385563**

ஆசிரியர் குழு

**திரு.செ.பிரிந்தாபரன்**

**திரு.செ.சசிராஜ்**

**திரு.ச.க.தேவதாசன்**

இதழ்க்குழு ஆலோசகர்

**திரு.க.சர்வானந்தா**

வெளியீடு

**கருவி**

**மாற்றுத்திறனாளிகளின்**

**சமூகவள நிலையம்**

இல.1166/15, அருளம்பலம் ஒழுங்கை

நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

பொருளடக்கம்

1. உள்ளத்து விதை-04
2. வலுவிடம் கேளுங்கள் -------------- 06
3. அங்கவீனத்தை ஏற்படுத்தும் தொற்றுநோய் பற்றி அறிந்துகொள் வோம்.---------------------------------- 07
4. விழிப்புலனற்ற ஒருவருக்கு நல்லதொரு நண்பனாக இருப்பதற்கு உங்களுக்கு சில குறிப்புகள் -------------------------------- 11
5. செய்திச் சாளரம்-17
6. தோற்றுப்போகும் வெற்றிகள்--------19
7. எண்ணக் கிண்ணம் -----------------23
8. தரணியில் உயர்ந்த
9. நற்சிந்தனையாளர்--------------------25
10. தசரசம் --------------------------------33
11. முற்றத்து மல்லிகை -------------------45
12. வலு தரும் ஜோதிடம் ------------------53
13. எழுதுங்கள் வெல்லுங்கள் --------- 55



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையத்தால் வலுவிழப்புடன் கூடிய நபர்களின் கல்வி, கலை, கலாசார மற்றும் வாழ்வாதார மேம் பாட்டிற்கான முன்னெடுப்புக்கள் செயற்படுத்தப்படுகின்றன. இத்தகைய சமூகப் பணி பாராட்டுக்குரியதாகும். நலன் விரும்பிகள், சமூக சேவை ஆர்வலர்கள், இந்நிறுவனத்தின் சேவைக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும். மாற்றுத் திறனா ளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வலு என்னும் சஞ்சிகையினை இந்நிறுவனம் வெளியீடு செய்கின்றது.

அந்த வகையில் மாற்றுத்;திறனாளிகள் தொடர்பான விடயங்களையும் அவர்களின் ஆக்கங்களையும் பொது விடயங்களையும் தாங்கி வெளிவரும் வலுச் சஞ்சிகையை பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சஞ்சிகை தொடர்ந்து கனதியான விடயங்களைத் தாங்கி வெளிவரு வதற்கு மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

பேராசிரியர் இ. விக்னேஸ்வரன்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

'கருவி" மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் நான்காவது ஆண்டு நிறைவில் வெளியீடு செய்யும் 'வலுச்" சஞ்சிகைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

'கருவி" மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் சமூகம் சார்ந்து பல பணிகளை ஆற்றிவருகின்ற அதேவேளை அவர்களின் வாழ்வாதாரத்தை மேலோங்கச் செய்யும் முனைப்புடன் முன்னெடுக்கும் பணிகள் போற்றத்தக்கவை.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதார உதவிகள், நலிவுற்றோருக்கான அன்பளிப்புக்கள், ஆத்மீக ஆற்றுப்படுத்தல் என்பவற்றோடு 'வலு" காலாண்டு சஞ்சிகையின் வெளியீடும் இவர்களின் பணியை உலகறிய செய்கின்றது எனலாம்.

இவர்களால் முன்னெடுக்கப்படும் பணிகள் அனைத்தும் அன்பர்களாலும், ஆர்வலர்களாலும் கொடையாளர்களின் பரோபகாரத்தினாலும், நடைபெற்றுக்கொண்டிருப்பதனை போசகர் என்ற வகையில் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

சமூக அபிவிருத்திப் பங்களிப்போடு செயற்படும் கருவி தொடர்ந்து தனது பணியை முன்னெடுக்க ஆக்கமும் ஊக்கமும் வழங்கி செயற்பட்டுக் கொண்டிருக்கும் கருவி செயற்பாட்டுக் குழுமத்திற்கும், 'வலுச்" சஞ்சிகையை வலுவுடன் செயற்படுத்தும் மலர் குழுவினருக்கும் எல்ல வகையிலும் சிறப்புற தமது பணியை செயற்படுத்தி வலுச் சேர்க்கும் வலுச் சஞ்சிகை மலர்ந்து நறுமணம் பரப்ப என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி

**நா.வேதநாயகன்,**

அரசாங்க அதிபர். யாழ் மாவட்டம்.

# உள்ளத்து விதை

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்
இல.1166/15, அருளம்பலம் ஒழுங்கை நல்லூர் வடக்கு,யாழ்ப்பாணம்.
Phone - 021 205 4224 Email - karuvi.org@gmail.com Web - www.karuvi.org

வலு சஞ்சிகையின் பதிநான்காவது இதழ் கருவி சமூக வள நிலையத்தின் நான்காவது அகவையின் சிறப்பிதழாக வெளிவருவதை இட்டு நாம் மிகுந்த மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைகின்றோம். வலுவின் வலுவான பயணம் வாசகர்களாகிய உங்களது வலு மிக்க ஒத்துழைப்பினாலேயே சாத்தியமாகின்றது என்பதை மிகுந்த நன்றியுணர்வோடு இத்தருணத்தில் நாம் வெளிப்படுத்தி நிறகின்றோம்.

2013 ஆண்டு யூன் மாதம் பன்னிரெண்டாம் திகதி விநாயகர் சதுர்த்தி நாளன்று புதிய உதயத்தை பிரசவிப்பதற்கான ஓர் இனிய சந்திப்பு. சமூகப்பணி சார்ந்த ஈடுபாட்டோடும் அனுபவத்தோடும் உதிரிகளாக வாழ்ந்து கொண்டிருந்தவர்களை கூட்டிணைத்து பயனுறுதியுள்ள ஓர் சமூகப்பணி பாரம்பரியத்தைத் தோற்றுவிப்பதும் அதனூடாக நலிவுற்ற மக்கள் சமூகத்தின் ஓர் பகுதியினராக இருக்கின்ற வலு இழப்புடன் கூடிய நபர்களது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பி அவர்களை சேவை வழங்குனர்களாக தரமுயர்த்துவதும் என்பதை நோக்கமாகக் கொண்டு அந்தச்சந்திப்பு அமைந்திருந்தது.

இயற்கை , யுத்தம் , விபத்து மற்றும் ஏனைய அனர்த்த நிலைமைகளுக்கு உட்பட்டு அங்கவீனமானவர்களுக்கான பணிகளையும் சமூக மேம்பாட்டை முன்னிறுத்திய பணிகளையும் முறைப்படுத்தப்பட்ட வகையில் மேற்கொள்வதற்கு எமது சமூக மட்டத்தில் ஒரு கருவி தேவை என்பதை அந்த சந்திப்பில் கலந்து கொண்டவர்களது கருத்து மாறல்களூடு நாம் உணர்ந்து கொண்டோம். இத்தகைய கருத்து வெளிப்பாடுகளும் எங்களின் மனதில் நீண்ட நாள் உறை நிலைமையில் இருந்த சிந்தனைக்கு உயிர் கொடுத்தது எனலாம். அன்றைய சந்திப்பு கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையத்தின் தோற்றத்திற்கு உத்தியோக பூர்வமான தளத்தைத் தந்தது.

சேவை பெறுனர்களையும் , சேவை வழங்குனர்களையும் தொடர்புபடுத்தி விடுகின்ற ஓர் பாலமாகவும் மாற்றுத்திறனாளிகளும் சமூகப்பணிகளில் ஈடுபட முடியும் என்பதை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் கருவியை நாம் காண்கின்றோம். நல்லவற்றைச் சிந்திக்கவும் நல்லவிதமாய் பணிகள் செய்யவும் வாய்ப்புக்களை கருவி குவி மையப்படுத்தி உள்ளது. எமது சமூகத்தின் ஆரோக்கியமான இருத்தலுக்காக முடியுமான அனைத்தையும் செய்வது என்பதை கருவி சமூக வளநிலைய வளவாளர்கள் அனைவரும் தம்முள் வரித்துக் கொண்டுள்ளனர்.

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம் பதினொரு பேர் கொண்ட நிர்வாக சபையாய் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. பொதுச்சபை , வளவாளர் சபை, போசகர் சபை ஆகிய கட்டமைப்பு முறையினை எமது நிறுவனம் கொண்டுடிருக்கின்றது.

வலு இழந்த அங்கத்தவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கல், வட்டி அற்ற கடன் உதவிகளை வழங்கல், அங்கத்தவர்களுக்கும் அங்கத் தவர்களின் பிள்ளைகளுக்குமான கற்றல் வசதிப்படுத்தல்கள், வலு இழப்பு இழப்பைக் குறைத்தல், தடுத்தல் தொடர்பான சமூக விழிப்புணர்வை மேற்கொள்ளல். அங்கத்தவர்களுக்கான மருத்துவ சுகாதார வசதிகளை வழங்கல்,மாற்றுத்திறனாளிகளைநவீனசெந்நெறிகளுக்குஇசைவாக்குதல், வலு இழந்தவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தல் ஆகிய பணிகளை கருவி சமூக வளநிலையத்தின் ஊடாக நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த நான்கு ஆண்டுகளில் கருவி சமூக வளநிலையம் சமூக பணி பரப்பில் பல மைல் கற்களை பதிவாக்கி உள்ளது. வலு காலாண்டு சஞ்சிகை , இராகஸ்சுருதிஇசைக்குழு,கருவிபட்டிமன்றக்குழு,கருவிஅவைக்காற்றுகைக் குழு ,உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. அங்கத்தவர்களின் நலமேம்பாட்டுத் திட்டங்களுக்காக இற்றை வரை பதினொரு தசம் இரண்டு மில்லியன் ரூபாக்கள் செலவீடு செய்யப்பட்டுள்ளன.

கருவி சமூக வள நிலையத்தின் பணிகள் அனைத்தும் நல்மனம் கொண்ட கொடை யாளர்கள், நலன் விரும்பிகள், ஆர்வலர்ளின் பங்களிப்புடனேயே

முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இத்தருணத்தில் கருவியின் வேராக நின்று தங்கள் அறிவு வளம், பொருள் வளம் , மனித வளம் ஆகியவற்றை நல்கி எமது பணிகளுக்கு உரமூட்டிக் கொண்டிருக்கின்ற அனைத்து நல்லுள்ளங் களுக்கும் நான்காவது அகவை நாளில் நெஞ்சார்ந்த நன்றிகளை காணிக்கை ஆக்குகின்றோம். காலச்சக்கரத்தின் கனதியான உந்து விசையாய் கருவி என்றும் திகழும் என்பது எங்களது அசைக்க முடியாத நம்பிக்கை.

நன்றி


பிரதம ஆசிரியர்
திரு.க.தர்மசேகரம்,
தலைவர், கருவி நிறுவனம்.

# வலுவிடம் கேளுங்கள்

**நான் ஒரு மாற்றுத்திறனாளி பொருத்தமான அரச நியமனம் ஒன்றைப் பெற்று குறித்த ஒரு சேவை நிலையத்திற்கு பணியாற்றச் சென்றேன். அங்கிருந்த மேலதிகாரி அங்கு நான் பணியாற்றுவதை தட்டிக் கழித்து விட்டார். தற்போது அதே பணி சார்ந்து பிறிதோர் நிலையத்தில் அதே நியமனத்திற்கு அமைவாக பணியாற்றுகின்றேன். இது பற்றி வலுவின் கருத்து என்ன?**

**- சுதா. இனுவில்**

முதலில் தங்களது நியமனத்தை ஏற்றுக் கொண்ட அதிகாரியை பாராட்ட வேண்டும். அடுத்த விடயம் என்னவெனில் இந்த சம்பவம் நியமனத்தை தட்டிக் கழித்த மேலதிகாரியின் அறியாமையையே வெளிப்படுத்தி நிற்கிறது. தவிரவும் தங்களுக்கான நியமனத்தை தட்டிக் கழிக்கின்ற அளவிற்கு குறித்த மேலதிகாரி நடந்து கெண்டிருப்பாராயின் அது கண்டிக்கத்தக்கதும் சட்ட ரீதியான நடவடிக்கைக்கு உட்படுத்தக் கூடியதுமாகும். இது சார்ந்து தாங்களே அதிக கவனம் எடுக்க வேண்டும்.





# அங்கவீனத்தை ஏற்படுத்தும் தொற்றுநோய் பற்றி அறிந்துகொள்வோம்.

மருத்துவர் பொ. ஜெசிதரன்
சுகாதார வைத்திய அதிகாரி
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

உடலில் ஊனத்தை ஏற்படுத்தி இன்னொருவரில் சார்ந்து வாழும் நிலையை ஏற்படுத்தும் நோய்களில் தொழு நோயும் ஒன்றாகும்.இது பரம்பரை நோயல்ல. இது ஒரு தொற்றுநோயாகும். இது, Mycobacterium leprae எனும் ஒரு வகை பக்ரீரியாவினால் ஏற்படுகிறது. நோயாளி தும்மும் போதும் இருமும் போது சிந்தும் சிறு துளிகளினால் (Droplets) ஒருவரிடமிருந்து மற்றையவருக்கு பரம்புகின்றது. இதன் நோயரும்பு காலம் 3 - 5 வருடங்கள் வரை நீண்டு காணப்படலாம்.

இது எல்லா வயதினரையும் ஆண், பெண் இரு பாலினரையும் தாக்கக் கூடியது. பெரும்பாலும் பொருளாதார வளம் குன்றிய குடும்பத்தினரே இலகுவில் பாதிப்புறுகின்றனர். தோல் மற்றும் நரம்புகளையே இந்நோய் முதன்மையாக தாக்குகின்றது.

முன்னைய காலங்களில் குஷ்டரோகம் என அழைக்கப்பட்டதும் இந்நோயே ஆங்கிலத்தில் இந்நோயை Leprosy என அழைப்பர். இந்நோயை ஆரம்ப நிலையிலேயே இனங்கண்டு, அதற்கான சிகிச்சையை பெற்றுவரின் பூரண குணமடையலாம். அங்கவீனம் அடைவதனையும் தவிர்த்துக் கொள்ளலாம். இந்நோய் முற்றாக குணப்படுத்தக் கூடிய நோயே. அசண்டையீனமாக, கவனிக்காதிருப்போமானால் இந்நோய்ப் பாதிப்பு அதிகரித்து நிரந்தர அங்கவீனமுறும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விடும். இந்நோயை குணப்படுத்தக் கூடிய மருந்து வகைகள் இங்கு யாழ்ப்பாணத்தில் கிடைக்கக் கூடியதாக உள்

ளது. குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் தோல் நோய் சிகிச்சைப் பிரிவில் அவற்றை இலவசமாக பெற்றுக் கொள்ளவும் முடியும். அதிலும் விசேடம் என்னவெனில் ஒரு நாள் மாத்திரை எடுத்தாலே, இதன் தொற்றும் தன்மை இல்லாது போவதுடன் அங்கவீனமுறும் துர்ப்பாக்கியமும் இல்லாது போகின்றமையாகும்.

யாழ்ப்பாணத்தின் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டுமே இந்நோயாளிகள் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டனர். ஆனால் இன்று அவ்வாறில்லாமல், இந்நோய்த் தாக்கம் பரவலாக காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது. குருநகர், நாவாந்துறை போன்ற பகுதிகளிலும் நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இந்நோயாளிகள், வேறோர் நோய்க்கு சிகிச்சை பெற செல்லும் போது, விபத்தாகவே இந்நோய் இனங்காணப்பட்டுள்ளது. எனவே எம்மத்தியில், தமக்கு இந்நோய் தொற்றியுள்ளது என அறியாது. இந்நோயுடன் வாழ்வோரின் எண்ணிக்கை, இதுவரை இனங்காணப்பட்டோரிலும் அதிகமாகவே இருக்க வாய்ப்புக்கள் உள்ளது. எனவே இந்நோயின் ஆரம்ப அறிகுறிகளை நாம் அனைவரும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது. குறிப்பாக மக்களுடன் நேரடியாக அவர்களின் சூழலில் தொடர்புற்று சேவை வழங்கும் உத்தியோகஸ்தர்கள், இந்நோயின் அறிகுறிகளை தெரிந்திருப்பின், அவர்களை வழிப்படுத்தி சிகிச்சைக்குட்படுத்தி அவர்களின் வாழ்வு நிலை கீழ்நோக்கி வீழும் அபாய நிலையை தடுத்திட முடியும். சிகிச்சைக்குட்படுபவர்கள் தொடர்ந்தும் மாத்திரைகளை உள்ளெடுத்து வருவதனை உறுதி செய்து கொள்ளவும் முடியும். இவ்வாறு செய்யின், இந்நோய் சமூகத்திற்கு மேலும் பரம்பலுறுவதை தடுத்திட முடியும். இந்நோய்க்கான மாத்திரைகளை பரிந்துரைக்கப்பட்ட காலம் வரை பாவித்துவரின் பூரண குணம் கிடைக்கும். இவ்வாறு செய்யின், இந்நோய் சமூகத்திற்கு மேலும் பரம்பலுறுவதை தடுத்திட முடியம்.

ஆரம்ப காலங்களில் இந்நோய் பற்றி அறிந்திராமையால், இது ஒரு தெய்வக் குற்றம், சாபம் என நினைத்து பரிகாரம் தேட முற்பட்டனர். நேர்த்தி, கழிப்பு என மூட நம்பிக்கைகளில் மூழ்கி, பணம் - நேரம் - செல்வம் இழந்து ஈற்றில் அவர்களை கைவிட்டு அல்லது காட்டிற்கு துரத்தி விடும் நடைமுறைகளே இருந்தன. இவை எமது அறியாமையால் விளைந்தவையே. இவ்

வாறு காட்டில் விரட்டப்பட்டு பழங்க ளையும் கிழங்கு வகைகளையும் உட்கொண்டு வாழ்ந்து வந்த மூதாட்டி ஒருவர் அண்மையில் பத்திரிகை நண்பரொருவரினால் வெளிச்சத் திற்கு கொண்டு வரப்பட்டு, சிகிச்சை யளிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இந் தியாவில் நிகழ்ந்துள்ளது.

அமைதியாகவும் மெதுவாகவும் எதுவித ஆரவாரமின்றியும் இந்நோய் எம் சமூகத்தினுள் ஊடுருவி வரு கின்றது. எனவே நாம் அனைவரும் இந்நோய் பற்றி விழிப்புற்று பாதிப் பிற்குள்ளானவர்களை ஆரம்பத்தி லேயே இனங்கண்டு சிகிச்சைய ளிக்க உதவ வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. இந்நோயின் குணம் குறிகளை பார்ப்போமானால், தோலில் ஏற்படும் தேமல் போன்ற அடை யாளங்களாகவோ தளும்புகளா கவோ தோன்றும். இவை வெளிறிய நிறமாகவோ சிவப்பு நிறமாகவோ அல்லது செங்கபில நிறமாகவோ காணப்படும். இவற்றில் கடி - சொறித் தன்மை இருக்காது. இவற்றில் உணர் வுத்தன்மை குறைவாகவோ அல் லது முற்றாக இல்லாததாகவோ காணப் படும் குறிப்பாக நோவு, தொடுகை, சூடு, வெக்கையை உணரும் தன்மை இருக்காது. இவ்வடையாளங்களில் உரோமங்களும் வியர்வைச் சுரப் பிகளும் கூடக் காணப்படமாட்டாது. இவற்றை விட தோலில் சிறு சிறு கட்டிகளும் (Skin nodules) மினு மினுப்பான தடித்த தன்மையும் சில ரில் காணப்படலாம்.

நரம்புகளில் ஏற்படும் மாற்றங் களை பார்ப்போமானால், தடிப்ப டைந்த நரம்புகள், மணிக்கட்டு சோர் வடைதல் (Wrist drop), விரல்களை நீட்டமுடியாமை (Law hand), பாதத்தை நிமிர்த்த முடியாமை அல்லது பாதம் சோர்தல் (Foot drop) விறைப்புறுதல் காரணமாக பாதம் அடிக்கடி பொருட் களுடன் மோதுண்டு மாறாத புண் கள் (Neuropathic ulcer) ஏற்படும். கண் களை முழுமையாக மூட முடியாமை இதனால் பிற பொருட்கள் கண்களி னுள் விழுந்து கண்கள் சிவப்புறுதல் வீங்குதல் போன்ற அறிகுறிகள் தோன் றும். கவனிக்காது விடுமோமெனில் பார்வையிழப்பு ஏற்படும்.

சாதாரணமாக, தேமலுக்கு பூசப் படும் பூச்சு மருந்துகளுக்கு, இத் தோல் பாதிப்புக்கள் குணமடைய மாட்டாது. எனவே மேற்சொன்ன ஏதேனும் ஒரு அறிகுறியாவது இருப் பின் அருகிலுள்ள வைத்தியரிடமோ அல்லது தோல் சிகிச்சை நிலையத் திற்கோ சென்று ஆலோசனை பெற் றுக் கொள்ளுதல் நன்று.

கால், கைகளில் விறைப்புத் தன்மைகொண்டநோயாளிகளுக்கு காயங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம். இது மீளமுடியாத அங்கக் குறைபாடுகளை காலப்போக்கில் ஏற்ப டுத்தி விடும். எனவே அங்கங்களை பாதுகாக்கும் முயற்சியில் கவனம் செலுத்துதல் வேண்டும். சூடான பொருட்களையோ கூரான ஆயுதங்க ளையோ கையாளும் போது பாது காப்பான அங்கிகளை அணிந்து கொள்ளுதல், பொருத்தமான பாத ணிகளை அணிந்து கொள்ளுதல், வீட்டிலிருந்து வெளிக்கிளம்பும் போது பாதுகாப்பு கண் - கண்ணாடிகளை அணிந்து கொள்ளுதல், நித்திரை செய்யும் போதும் கண் பாதுகாப்பை உறுதி செய்தல் போன்ற தடுப்பு முறைகளில் கவனம் செலுத்துதல் நன்று.

இருமும் போதும் தும்மும் போதும் கைக்குட்டைகளை பாவித்தல், பொது இடங்களில் கண்டபடி துப்புவதை தவிர்த்தல் போன்ற பழக்கங்கள் மூலம் ஒருவரிடமிருந்து மற்றையவ ருக்கும் நோய் பரம்புவதை தடுத்திட முடியும்.

மருந்துப் பாவனைக் காலத்தில், தோல் நிறம் கருமையடைதல், சிறு நீர் சிவப்பு நிறமாக மாறுதல் என்பன போன்ற பக்க விளைவுகள் ஏற் படலாம். இவை பற்றி பயம் கொள் ளத் தேவையில்லை. சிகிச்சை நிறை வில், இவை பழைய நிலைக்கு திரும்பும் சிகிச்சைக் காலத்தில் ஒவ்வாமையை ஏற்படுத்தும் உணவு வகைகளை தவிர்த்தல் நன்று. இந் நோய்க்கான பரிசோதனையை குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் செய்து கொள்ள வேண்டும். தமக்கு நோய் தொற்று ஏற்படவில்லை என்ப தனை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். சிகிச்சை பெற்று வரும் நோயாளியை சமூகத்திலிருந்து ஒதுக் கிவைக்கப்படவேண்டியதில்லை. அவர் களுக்கான சமூக அந்தஸ்தையும் மரியாதையையும் பறித்தல் கூடாது. சிகிச்சை பெற்றுக் கொள்வதனை ஊக்குவிக்கும் நோக்கில், இந் நோயாளிகளுக்கு பிரதேச செயலக - சமூக சேவைகள் திணைக்களத்தி னால் மாதந்தோறும் உதவிப் பணக் கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்படு கிறது.

"நோயை ஆரம்ப நிலையில் இனங் காண்போம் பூரண சுகம் பெறுவோம்.".

தை மாத கடைசி ஞாயிற்றுக் கிழமை அன்று சர்வதேச தொழுநோய் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.




# விழிப்புலனற்ற ஒருவருக்கு நல்லதொரு நண்பனாக இருப்பதற்கு உங்களுக்கு சில குறிப்புகள்

1. விழிப்புலனற்ற ஒருவரை வெளியே அழைத்துச் செல்ல வேண்டுமாயின் அவரது வலது கையை உங்களது இடதுகையின் முழுங்கைக்கு மேல் பற்றிக் கொள்ளச் செய்யுங்கள் அவரது வலது பக்கத்தில் நீங்கள் அரை அடி முன்னதாகவும் உங்கள் இடது பக்கத்தில் அவர் அரை அடி பின்னதாகவும் இருக்குமாறு செய்து



நடக்கத்தொடங்குங்கள் அவ்வாறாயின் வாய்வழி பேச்சு இன்றியே உங்கள் உடல் அசைவு மொழியில் இருந்து அவர் நேரே நடப்பதையும் திரும்ப வேண்டிய இடங்களில் திரும்புவதையும் ஏற வேண்டிய இடங்களில் ஏறுவதையும் இறங்க வேண்டிய இடங்களில் இறங்குவதையும் உணர்ந்து கொண்டு அதற்கேற்ப செயற்படுவார். அவசியமான போது அவரது இடது கையால் உங்களது வலது கையின் முழங்கைக்கு மேலே பற்றிக் கொண்டும் நடக்கச் செய்யலாம்.

2. யாதுமொரு காரணத்தால் ஒருவர் மட்டுமே செல்லக் கூடிய இடத்தின் ஊடாக செல்ல நேர்ந்தால் உடனடியாக அவர்உங்களைபற்றியிருக்கும் கையை (பொதுவாக) அது உங்கள்

வலது கையாக இருக்கும் உடனடியாக உங்கள் முதுகு பக்கமாக வளைத்துக் காட்டவும். இது எனது இடது பக்கத்தில் வருவதற்கு பதிலாக எனது பின் பக்கமாக வாருங்கள் என்பதை அவருக்கு குறிப்புணர்த்தும் அவர் உடனடியாக உங்கள் இடது பக்கத்தில் இருந்து பின் பக்கத்திற்கு நகருவார். அவர் உங்கள் வலது கரத்தை பற்றியிருந்தாலும் இதே நடைமுறை பொருந்தும்.

3. யாதுமொரு காரணத்தால் உங்கள் இடது பக்கத்தில் வந்து கொண்டிருக்கும் அவரை உங்கள் வலது பக்கத்திற்கு மாற்ற வேண்டும் என வைத்துக் கொள்ளுங்கள் உடனே அவரது இடது கையைப்பிடித்து அவர் ஏற்கனவே தனது வலது கையால் பிடித்துக் கொண்டிருக்கும் உங்கள் இடது கையின் மேல் வையுங்கள். இது அவர். பக்கம் மாற வேண்டும் என்பதை அவருக்கு குறிப்புணர்த்தும். அவர் உடனே உங்கள் இடது கையை தனது இடது கையால் பிடித்துக் கொண்டு தனது வலது கையை உங்கள் முதுகுபுறமாக கொண்டு வந்து உங்கள் வலது கையைப் பிடிப்பார். பின்னர் தனது இடது கையையும் உங்கள் இடது கையையும் விட்டு விட்டு முதுகுப்புறமாக கொண்டு வந்து உங்கள் வலது கையை பிடித்துக் கொள்வார். பின்னர் உங்கள் வலது கையை ஏற்கனவே பிடித்துக் கொண்டிருக்கும் தனது வலது கையை எடுத்து விட்டு நடக்கத் தொடங்குவார். உங்கள் இடது புறத்தில் இருந்து வலது புறத்திற்கு அவரை மாற்றுவது போலவே உங்கள் வலது புறத்தில் இருந்து இடது புறத்திற்கு மாற்றுவதாக இருந்தால் இதே நடைமுறையே இதற்கு எதிர்மாறான முறையில் செய்யவும்.



4. நடந்து செல்லும் போது யாதுமொரு தடையால் தரித்து நிற்க நேரிடலாம். உதாரணமாக பிறிதொரு

வரோடு நின்று உரையாட நேரிடலாம். அப்போது விழிப்புலன் அற்றவர் உங்கள் கரத்தை விட்டு விட்டு சாதாரண நிலையில் நின்று கொண்டிருக்கலாம். இந் நிலையில் தடை நீங்கி தொடர்ந்து நடக்க ஆரம்பிக்க வேண்டுமாயின் உங்கள் இடது கை உள்ளங்கையின் வெளிப்புறத்தால் அவரது வலதுகையின் உள்ளங் கை வெளிப்புறத்தில் 3 தடவை கள் மெதுவாக தட்டவும். இது நடக்க ஆரம்பிக்கிறோம் என்பதை குறிப்புணர்த்தி உங்கள் கையை பற்றிக் கொள்ள செய்யும். அவர் உங்கள் வலது பக்கம் இருந்திருந்தால் இதே நடைமுறையை மாற்றிச் செய்யவும்.


5. ஒரு விழிப்புலனுணர்வற்றவரை அழைத்துச் செல்லும் போது பாதை மீது எப்போதும் கவனமாக இருங்கள். உங்கள் பக்கத்திலும் உங்களுக்கு முன்னாலும் உள்ள தடைகளை பற்றி கவனமாய் இருங்கள் அதேவேளையில் எப்போதும் விழிப்புலனற்றவர் பக்கமாக வரும் தடைகள் பற்றி அதிக கவனமாக இருங்கள் இயலுமான வரை வெளிச்சங்களால் உங்கள் கவனம் ஈர்க்கப்படுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் அதற்காக எவ்வித உரையாடலும் சலனமும் இன்றி மௌனமாகத் தான் நடந்து செல்ல வேண்டும் என்பது கட்டாயமே இல்லை.

6. ஒரு விழிப்புலனற்றவரோடு செல்லும் போது நீங்கள் ஒரு வழிகாட்டி என்பதை எப்போதும் நினைவில் வைத்திருங்கள் எனவே ஒரு மண்டபத்தினுள் பிரவேசிக்கும் போதோ அல்லது ஒரு வண்டியில் ஏறும் போதோ ஒரு வழிகாட்டியே முதலில் அதைச்செய்ய வேண்டும் என்பதை மறவாதீர்கள். ஒரு மண்டபத்தினுள் பிரவேசிக்கும் போது நீங்கள் முன் செல்வதாகவும் விழிப்புலனற்றவர் உங்களை பின் தொடர்வதாகவும் இருத்தல் வேண்டும் அவரை முன்னே செல்லச் செய்து நீங்கள் பின்னால் இருந்து தள்ளிக் கொண்டு செல்வதையோ வழி காட்டுவதையோ ஒரு போதும் செய்யாதீர்கள்.

7. விழிப்புலனற்றவரை அழைத்துச் செல்லும் போது உங்கள் வேகம் அதிகமாக இருந்தால் அவர் உங்களை பிடித்திருக்கும் தனது கையால் உங்கள் கையை 3 தடவைகள் மெதுவாக அழுத்துவார் இது உங்கள் வேகம் அதிகம் என்பதை உங்களுக்கு குறிப்புணர்த்தும் அதற்கேற்ப நீங்கள் உங்கள் வேகத்தை குறைக்கவும், சாதாரணமாக நடந்து கொண்டிருக்கும் போது நீங்கள் வேகத்தைக் அதிகரிக்க விரும்பினால் அவர் உங்களை பிடித்திருக்கும் கையை 3 தட

வைகள் மெதுவாக முன்னோக்கி இழுத்துக் காட்டுங்கள் இது அவர் தனது வேகத்தைக் கூட்ட வேண்டும் என்பதை குறிப்புணர்த்தும் அதற்கேற்ப அவர் தனது வேகத்தை கூட்டுவார். வேகத்தை குறைக்க வேண்டுமெனின் உங்கள் கையை 3 தடவைகள் மெது வாக பின்நோக்கி அசைத்துக் காட்டுங் கள். அது அவரது வேகத்தைக் குறைக் குமாறு அவருக்கு குறிப்புணர்த்தும் அதற்கேற்ப அவர் தனது வேகத்தைக் குறைத்துக் கொள்வார்.


8. நடந்து செல்லும் பாதையில் தாண்டி கடக்கக் கூடிய வடிகால் ஒன்று எதிர்ப்பட்டால் அது பற்றி முற் கூட்டியே அவருக்கு கூறுங்கள் வடி காலை நோக்கி செங்குத்தாக 90 பாகை கோணத்தில் அழைத்துச் செல் லுங்கள் சரிவான கோணத்தில் அழைத்துச் சென்றால், வடிகாலின் விளிம்பில் காலை வைத்து இடறி விழுந்துவிடக் கூடும். வடிகாலை அண் மித்ததும் நீங்கள் முதலில் கடவுங் கள் பின்னர் அவரை இடது பாதத்தை வடிகாலை நோக்கி மெதுவாக முன் நகர்த்துமாறு கூறுங்கள் பாதம் வடி காலின் விளிம்பை தொட்டவுடன் அதனை உறுதியாக ஊன்றிக் கொண்டு வலதுகாலை முன்நோக்கி நீட்டுமாறு கூறுங்கள். சரி என்று கூறிய பின் னரே வலது காலை நிலத்தில் ஊன்ற வேண்டும் என்று அறிவுறுத்துங்கள் அவர் வலது காலை போதுமான அளவிற்கு நீட்டி நிலத்தைத் தொடக்



கூடியதாக வந்தவுடன் சரி என்று கூறுங்கள் அவர் இலகுவாக வடி காலை கடந்து விடுவார்.


9.ஒரு படியில் அல்லது படிக் கட்டுக்களில் ஏறுவதற்காக விழிப்பு லனற்றவரை அழைத்துச் செல்லும் போது இன்னும் சற்று நேரத்தில் ஒருபடியில் அல்லது படிக்கட்டுகளில் நாம் ஏற வேண்டியுள்ளது. அல்லது இறங்க வேண்டியுள்ளது என்பதை அவருக்கு கூறுங்கள் எப்போதும் படி அல்லது படிக்கட்டுக்கு செங்குத்தாக 90பாதை கோணத்தில் அவரை

அழைத்துச் செல்லுங்கள் மாறாக சரிவான கோணத்தில் அழைத்துச் சென்றால் படியில் ஏறும் போது



அல்லது இறங்கும் போது படியின் விளிம்பில் பாதங்களை வைத்த அவர் விழுந்து விடக் கூடும். ஏறு வதற்கு அல்லது இறங்குவதற்கு படியை அண்மித்தவுடன் ஒரு கணம் தரித்து நில்லுங்கள். அது படி வந்து விட்டது என்பதை அவருக்கு குறிப்பு ணர்த்தும். பின்னர்படியில் ஏறுங் கள் அல்லது இறங்குங்கள் உங்கள் உடல் அசைவு மொழியில் இருந்து அவர் படிகளில் ஏறுவர் அல்லது இறங்குவர்.

10. படிக்கட்டுகளில் ஏறும் போது அல்லது இறங்கும் போது படிக் கட்டுக்களுக்கு கைப்பிடி இருக் குமாக இருந்தால் படிக்கட்டுக்களை அண்மித்தவுடன் ஒரு கணம் தரித்து நில்லுங்கள். பின்னர் அவரது ஒரு கரத்ததைப் பிடித்து படிக்கட்டின் கைப்பிடியை பற்றிக் கொள்ளச் செய்யுங்கள். அது வலது கையாக இருப்பது சிறந்தது. பின்னர் நீங்கள் முதலில் படிக்கட்டில் ஏறி அல்லது இறங்கி செல்லுங்கள். அவர் சுயாதீ னமாக படிக்கட்டுகளின் கைபிடியை பிடித்தவாறு உங்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பார்.



படங்கள்


மா.சி.சிவதாசன் (பொறுப்பாசிரியர்)

"தனு ஆட்" நிறுவனம்

ஆக்கம்

வே.சுப்ரமணியம் B A(Hons) DIP IN EDU MET

தலைவர் மாவட்ட வலுவிழந்தோர் புணர்வாழ்வு நிறுவனம், வவுனியா




# POOBALASINGHAM BOOK DEPOT

Importers, Exporters, sellers & Publishers of Books,
Stationers and News Paper Agents
202, Sea Street, Colombo 11, Sri Lanka

# பூபாலசிங்கம் புத்தக சாலை


தமிழ் புத்தகங்களின் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் விற்பனையாளர். செய்திப் பத்திரிகைகள் முகவர். பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் விற்பனையாளர்.


**கிளைகள் :**

- பஸ் தரிப்பு நிலையம், யாழ்ப்பாணம்.
- செட்டியார் தெரு, கொழும்பு.
- வெள்ளவத்தை, கொழும்பு.
- நல்லூர் கோயில் வீதி, நல்லூர்.
- 1ஆம் குறுக்குத்தெரு, வேம்படி, யாழ்ப்பாணம்

**Branches :**

- 340, Sea Street, Colombo,
- 309 A - 2/3 ,Galle Road, Wellawatte, Colombo 06
- 4 A, Hospital Road, Bus Stand, Jaffna.
- 212, 1st Cross Street, Vembadi, Jaffna.
- Nallur Kandaswamy Temple Veethy, Nallur.





# செய்திச் சாளரம்

### ஆபத்தில் இருந்து யாழ் தேவியை காப்பாற்றிய மாற்றுத்திறனாளி

2016 நவம்பர் 14 அன்று காங்கேசன் துறையில் இருந்து காலி நோக்கி பயணித்த யாழ்தேவி புகையிரதம் வடக்குரயில் பாதையின் 108.3/4km மைல் கல் அருகே ஆபத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டது. குறித்த இடமான தபுத்தேகம மற்றும் சேனரத்கம ரயில் பாதைகளுக்கு இடையே ரயில் பாதை மூன்று அடி உடைந்து பிரிந்து இருந்தது. இதனை கண்ட மக்கள் பொலிஸ் அவசர இலக்கத்திற்கு அறிவித்தனர். அந்த அறிவிப்பு மேற்கொள்ளப்பட்ட சில நிமிடத்திலேயே ரயில் சத்தத்தை கேட்ட தம்புதேகமாவில் வசிக்கும் பார்வையற்ற மாற்றுத்திறனாளியான விஜித தனது வீட்டில் இருந்த சிவப்பு நிற ஆடை ஒன்றினை எடுத்து வந்து ரயிலை உடனடியாக நிறுத்த எச்சரிக்கை அசைவுகளை மேற் கொண்டார்.

ஆபத்தினை உணர்ந்த ரயில் சாரதி ரயிலை நிறுத்தினார் பின்னர் சாரதி மற்றும் அதிகாரிகள் ரயில் பாதையினை அவதானித்த போது ரயில் பாதை உடைந்திருந்தமையினைக் கண்டனர். குறித்த நபர் உரிய நேரத்தில் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டதன் ஊடாகவே பாரிய விபத்தொன்று தடுக்கப்பட்டது. என அவர்கள் குறிப்பிட்டனர்

### மாதம் ஒரு பொதி

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலயம் வலு இழந்த அங்கத்தவர்களில் தொழில் புரிய முடியாத பாதிப்புடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோருக்கு மாதம் ஒரு பொதி: எனும் திட்டத்தின் கீழ் உலர் உணவுப் பொதிகளை சுழற்ச்சி முறையில் வழங்கி வருகின்றது. இதன் ஊடாக இவர்களது உணவு பிரச்

சனைக்கு சிறு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது. சமூக ஆர்வலர்கள்மற்றும்நன்கொடையாளர்களின் பங்களிப்புடனே இத்திட்டமானது கருவி நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிறுவனமானது எதிர்காலத்தில் இத்திட்டத்தின் ஊடாக சுழற்ச்சி முறையில் அன்றி மாதாந்தம் அனைவருக்கும் மாதம் ஒரு பொதி வழங்கல் எதிர்பார்த்துள்ளது.

கருவி நிறுவனம் மாதம் ஒரு பொதி வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த மாதங்களில் வழங்கிய நிகழ்வுகளின் நிழல்கள் வலுவின் பின்புற அட்டையின் உள்புறத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

**க.பொ.த. சா/த பரீட்சையில் 8AB சித்தி பெற்றுச் சாதனை**

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் 2017மார்ச் மாதம் வெளி வந்தன. இப்பரீட்சையில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்தஅபிஷாயினிஅமிர்தலிங்கம் எனும் மாணவி 8A 1B சித்தியை பெற்றுச்சாதனை படைத்துள்ளார்.



மாற்றுத்ததிறனாளியான இம்மாணவி தன் உடல் அங்கக் குறைபாட்டை புறம்தள்ளி உயர்சித்தியினைப் பெற்றுள்ளமை ஒருசாதனை பதிவே ஆகும்.

**அன்பார்ந்த வாசக நெஞ்சங்களே!**

வலு என்ற இச் சஞ்சிகை உங்களுக்கானதே. எனவே உங்களுக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளை இச் சஞ்சிகை மூலமாக வெளிக் கொணருங்கள். மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான கேள்விகள் மற்றும் உங்களுக்கு இருக்கும் சந்தேகங்களை வலுவிடம் கேளுங்கள் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள்.

மயில்வாகனம் பிரக்கிராசியார் புகழரசியின் முகத்தைக் கவனித்தபடி அவள் சொல்வதையெல்லாம் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார். புகழரசி சொல்லிக் கொண்டிருந்தாள் என்பதை விட வார்த்தைகளை கொட்டித்தீர்த்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

## சிறுகதை

மயில்வாகனம் பிரக்கிராசிரியர் தம்மிடம் வருகிற வழக்குகளை பெரும்பாலும் வெற்றிகரமாக முடித்து வைப்பவர் என்று பெயர் வாங்கியிருந்தார். அதிலும் திருமண முறிவு சம்மந்தமான வழக்குகள் தான் அதிகமாக அவரிடம் வருகின்றன. முடிந்த வரை இரு பகுதியையும் சமாதானப்படுத்தி வழக்கை முடித்து வைத்து விடுவார். புகழரசியின் வழக்கும் இப்படியான ஒன்றுதான்.

இங்கே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் இளம் பிள்ளைகள் இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொள்வது சாதாரணமாக நடக்கின்ற சம்பவமாக இருந்தது. இதில் ஆண், பெண் வேறுபாடு இல்லாமல் இருபாலரும் சேர்ந்து கொள்வார்கள் புகழரசி 10ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டாள் ஏன்? எதற்காக? எப்படி என்பதெல்லாம் ஒருவரின் கற்பனைக்கு அப்பாற்பட்டது. போராட்டத்தில் இணைகிற பெண்களுக்கும் அங்கே வேறு ஒரு பெயர் கொடுத்து விடுவார்கள் கலையரசி, கடலரசி, அன்பரசி, வல்லரசி... என்று பின்னொட்டாக ஒரு அரசியை சேர்த்து விடுவார்கள் இப்படித்தான் ராதிகா புகழரசியானார்.

போர் முனைகளில் புகழரசி சிறப்பாக செயற்பட்டாள் வெகுவிரைவாக ஒரு அணித்தலைவியாக தன்னை உயர்த்திக் கொண்டாள். இறுதி யுத்தம் நடக்கிற காலம் வரையில் நிலைத்து நின்று பிடித்தாள். குமிழமுனைப் பக்கமாக முன்னேறி வந்த இராணுவத்தோடு நடந்த போரில் தன்னுடைய வலது காலை முழங்காலின் கீழ் இழந்து விட்டாள்.

யுத்தம் முள்ளிவாய்க்கால் வரை சென்று முடிவிற்கு வந்தது. புகழரசியும் மருத்துவமனை, தடுப்புமுகாம் என்றெல்லாம் போய் ஒருபடியாக விடுதலையாகி வெளியே வந்தாள். இப்போது அவளுக்கு சேர்ந்து கொள்வதற்கு தன்னுடைய வீட்டைத் தவிர வேறிடம் இல்லை வீடு நோக்கி விரைந்து

வந்தவளுக்கு வீட்டை தேடிப் பிடிப்பதே பெரிய பிரச்சினையாகி விட்டது. அந்த இடம் அப்போது விடுவிக்கப்படாத பிரதேசத்திற்குள் அகப்பட்டிருந் தது.

அடுத்த கட்டமாக தனது அயலவர் அல்லது உறவினர் யாராவது கிடைப்பார்களா என தேடினாள். மிகுந்த சிரமத்தின் மத்தியில் அவளுடன் பள்ளிக் கூடத்தில் ஒரே வகுப்பில் படித்த ரவீந்திரனை சந்தித்தாள். அவனிடம் விசாரித்த போது அதிர்ச்சித் தகவலொன்று அவளுக்கு கிடைத்தது. செல் வீச்சில் அகப்பட்டு அவர்களுடைய வீடு உடைந்து விட்டது. அப்பா அங்கேயே இறந்து விட்டார். அவளுடைய அண்ணன் அம்மாவையும்தங்கச்சியையும் கூட்டிக்கொண்டு தமிழ்நாட்டிற்குச் சென்று விட்டானாம். இப்போதைக்கு அவர்களுடைய தொடர்பை பெற்றுக் கொள்வது இயலாத காரியம்.

# தோற்றுப்போகும் வெற்றிகள்



ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் இழந்து விட்டு தனியே நின்றவளுக்கு ரவீந்திரன் எப்படி உதவி செய்ய முடியும் என்பது தெரியவில்லை அவனும் இதையே தான்யோசித்துக் கொண்டிருந்தான் தன்னுடைய வீட்டிற்கு அவளைக் கூட்டிக்கொண்டு போனால் அது பெரிய பிரச்சனையாகி விடும். யுத்தம் முடிந்து போன எங்கள் பிரதேசத்தில் பெண்கள் ஓடிப்போவதும் வழிதவறி கெட்டு குட்டிச்சுவராவதும் அன்றாட நிகழ்வுப் பதிவுளாகவே ஆகியிருக்கின்றன. எனவே கொஞ்சம் விசயம் தெரிந்த அவனுடைய அத்தை ஒருத்தியிடம் ராதிகாவை கூட்டிச்சென்றான் இனிமேல் புகழரசி என்ற பெயரையும் விட்டு விடுவோம்.

அத்தை மறுப்புத் தெரிவிக்காமல் ராதிகாவை தற்காலிகமாக ஏற்றுக் கொண்டாள். ராதிகா நல்லகெட்டிக்காரி என்பதை அவளுடைய நடவ

டிக்கைகளிலிருந்து அத்தை கற்றுக் கொண்டாள். இப்போதெல்லாம் பாதிக் கப்பட்ட பெண்களுக்கு புனர்வாழ்வு கொடுக்கும் நடவடிக்கைகள் ஆங் காங்கே நடைபெற்றுக் கொண்டு இருக் கின்றது. அப்படி ஒரு இடத்திற்கு ராதி காவை அழைத்துச் சென்று அத்தை சேர்த்து விட்டாள். அங்கே பயிற் சிக்கால வதிவிட வசதியோடு கண னியும் ஆங்கிலமும் கற்றுக் கொடுத் தார்கள். இப்போதைக்கு அவளை அங் கேயே விட்டுவிடுவோம். பயிற்சி நெறி முடிந்த பின்னர். மற்ற விடயங்களை யோசிக்கலாம் என்று அத்தை முடிவு செய்தாள்.

தான் எடுத்துக் கொண்ட கற்கை நெறியில் ராதிகா சிறப்புத்தேர்ச்சி பெற்றாள். அவளுக்கு ஒரு தனியார் நிறுவனத்தில் நல்ல சம்பளத்துடன் வேலையும் பெற்றுக் கொடுத்தார்கள். ரவீந்திரன் அவளை அடிக்கடி சென்று பார்ப்பான். இருவரும் ஏதோவெல் லாம் பேசிக் கொண்டார்கள். இப் போது ராதிகா வாங்குகிற சம்பளக் காசின் மீது ரவீந்திரனின் பார்வை வட்டமிடத் தொடங்கியது.

வெறும் மேசன் வேலைக்கு உதவி யாளாக ரவீந்திரன் போய்க் கொண் டிருந்தான். கொஞ்சம் தண்ணி போட வும் பழகியிருந்தான். வேலையைக் கற்றுக்கொண்டு முன்னேறுகின்ற எந்த முயற்சியும் அவனிடம் இல்லை. அதற் கான கெட்டித்தனமும் இல்லை. ராதி காவின் சம்பளத்தில் குளிர் காய லாம் என்று திட்டமிட்டான். தனக்கு பாதுகாப்பான உறவு கிடைக்காதா என்று ராதிகாவும் ஏக்கத்துடன் இருந் தாள். திட்டமும் எதிர்பார்ப்பும் ஒன்றை ஒன்று சரியாக அறிந்து கொள்ளாமல் ஒன்று சேர்ந்தன.

இருவரின் நலனிலும் அக்கறை உள்ள அத்தை முன்னின்று இருவ ரையும் சேர்த்து வைத்தாள். ராதிகா ஒருபெண் குழந்தைக்கு தாயானாள். இப்போது ரவீந்திரனின் நடத்தையில் வெகுவாக மாற்றங்கள் ஏற்பட்டன. வேலைக்கு போவதற்கு விருப்பமில்லை வெற்றிலை, பீடியுடன் கள்ளுக்கும் காசு கேட்பான். இல்லை என்றால் கையை நீட்டவும் ஆரம்பித்து விட் டான். அத்தையிடம் ராதிகா முறை யிட்டாள். ஒரு மாற்றமும் இல்லை.

இப்போது இன்னுமொரு மோச மான தகவல் ராதிகாவுக்கு எட்டியது. ஒரு விபத்தில் கணவனை இழந்த வசதிபடைத்த பெண் ஒருத்தியின் வீட்டில் சில திருத்த வேலைகள் செய்வதற்காக ரவீந்திரன் போனான். எப்படியோ அவளோடு பேச்சுக் கொடுத்து உறவை ஏற்படுத்திக் கொண்டான்.

ராதிகாவோடு முரண்டு பண்ணுவ தற்கு இதுவே காரணமாயிற்று. புது இடத்திலிருந்து அவனுக்கு காசு கிடைக் கிறது. கால் இல்லாத ராதிகாவோடு தாம்பத்தியம் வெறுத்தது. கணவனை இனிமேல் தன்னுடைய வழிக்கு கொண் டுவர முடியாதென்பதை அவள் புரிந்து கொண்டாள்.

ரவீந்திரனை முற்றாக விலக்கி வைப் பதென்று முடிவு செய்தாள். வீட்டிற்கு வர வேண்டாம் என்று ரவீந்திரனை வெளியே அனுப்பி விட்டாள். அவன் இப்போது புதிய உறவுக்காரியுடன் போய் ஒட்டிக்கொண்டான் ராதிகா அதோடு விட்டு விடவில்லை. விவாகரத்துக் காக வழக்குப் போட்டாள். ரவீந்திரன் சார்பில் மயில்வாகனம் பிரக்கிராசி யாரை புதிய உறவுக்காரி அமர்த்தி னாள். தான் எடுத்துக் கொண்ட வழக்கில் வெற்றியையே இலக்காக கொண்ட மயில்வாகனத்தார் ராதி காவை தனது வழிக்கு கொண்டு வரு வதற்கு முயற்சி எடுத்தார்.

ராதிகா தனது மனதிலுள்ள வற்றை சொல்லி முடித்தாள். கட்டுக் கோப்பான சில பண்புகளை போரா ளிகளிடம் பார்க்க முடியும் தவறுகள் அங்கே மன்னிக்கப்படுவது குறைவு ரவீந்திரனுடன் இங்கே ராதிகாவால் எந்த சமரசத்திற்கும் வர முடிய வில்லை. தமது முயற்சியில் மயில் வாகனத்தார் சலித்துப் போனார்.

தன்னுடைய வாழ்க்கைப் போராட் டத்தில் தோற்றுப்போன ராதிகா விவாகரத்து வழக்கில் வெற்றி பெற் றாள். இது வரையில் தோற்றுப் போகாத பிரக்கிராசியார் இந்த வழக்கில் தோற் றுப் போனார். தன்னுடைய புதிய வாழ்க்கையை தொடங்குவதற்காக மீண்டும் தனக்கு அடைக்கலம் அளித்த அதே புனர்வாழ்வு நிறுவனத்தில் சேர்ந்து விட்டாள். இப்போது அவள் பயிற்றுவிக்கும் வளவாளராக இருக் கிறாள். ரவீந்திரனைப் போன்ற பச் சோந்திகளிடமும் இன்னமும் ராதி காக்கள் அகப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

(யாவும் கற்பனையே)

நாவற்குழி
சு.சிவராசா

# எண்ணக் கிண்ணம்

## வானத்தையும் வசப்படுத்துவோம்...!

பொறிகளின் தறிகளில் இயற்கையின் நெசவு
நூலிழைத் தவறுகளால் நொந்து போவதா..... ?
மாற்று வலுவுடைய மனித ஆத்மாக்கள்
சேற்றிலே புதைந்து சோம்பிக் கிடப்பதா ...?

ஒற்றைக் காலில் நிற்கும் மலர்தானே
ஒவ்வொரு விடியலையும் அழகு படுத்துகின்றது....!
மற்றைக் கரம் தனக்கு இல்லையே என்று
ஒருபோதும் யானை நம்பிக்கை இழப்பதில்லையே....!

புதியதொரு நாளின் விடியலுக்காய்த் தானே
புல்லும் பூண்டும் காத்துக் கிடக்கின்றது..!
இதயங்கள் யாவும் இமயங்க ளானால்
அங்கங்கள் குறையும் அர்த்தம் இழந்து விடும்...!

பிறந்த நாள்முதலாய் பட்ட வேதனைகளை
இறந்த காலத்தில் இழந்து போனவைகளை
மறந்தே நாமும் மாற்றுவலு ஆற்றல்கொண்டு
சிறந்து விளங்கிச் சாதனை படைப்போம்

ஊனம் வாழ்வின் உயர்வுக்குத் தடையல்லவென்ற
உண்மையை உண்மையாய் உணர்ந்து கொண்டால்
வானம்கூட நாம் தொட்டுவிடும் தூரம்தான் ....!
வாழ்வும் கூட முற்றுப் புள்ளியல்ல காற்புள்ளிதான்....!

செல்வி வானதி செங்கதிர்ச்செல்வன்
யாழ் இந்து மகளிர் கல்லூரி


Drink
AnnA Coffee
Since 1958
ANNA INDUSTRY
Inuvil South, Inuvil.
Branches :
New Market Building Jaffna
214/5 Messenger Street. Colombo 12
Vavuniya
ANNA
JEEVAKARAM



### வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

# தாணியில் உயர்ந்த நற்சிந்தனையாளர்

நா. கீதாகிருஷ்ணன்,
நயினாதீவு.

உலக ஒட்டிசதினம் ஏப்பிரல 2 இல் அனுட டிக்கப்படுகின்றது. ஏப்பிரல் மாதம் முழுவ தும் ஓட்டிசம் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தும் பொருட்டு பலசெயற் திட்டங்கள் உலகளாவிய ரீதியில் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. இக்காலப்பகுதி யில் ஓட்டிச குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர்களை சந்தித்து உரையாடுதல் நிகழ்ச்சிகளை நடத்துதல் பரிசளித்துப் பாராட் டுதல் என பல செயற்பாடுகள் மேலை நாடு களில் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் எமது நாட்டில் இது தொடர்பான விழிப்பு ணர்வு இன்னும் போதிய அளவு இல்லை என்று தான் சொல்ல வேண்டும். பல பெற் றோர்கள் தம் குழந்தைகளுக்கு ஓட்டிசம் உள்ளது என்பதனை அறியாமல் இருப்பதும் உரிய வயதில் கண்டறியப்படாமல் போவதும் இக்குழந்தைகளின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கி விடுகின்றது. நவீன ஊடக வளர்ச்சி, இணையங்களில் சென்று ஓட்டி சம் தொடர்பான நிறைய விடயங்களை காண வழிவகுத்துள்ளது. எனினும் இவ்வசதி அனை வருக்கும் கிட்டும் என்று கூறிவிட முடியாது.

வலு ஓட்டிசம் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தும் நோக்குடன் யாழ். இராமநாதன் கல்லூரி விசேட கல்வி ஆசிரி யரான கீ. தாமரைச்செல்வி என்பவர் எழுதிய தரணியில் உயர்ந்த நற்சிந்தனையாளர் எனும் ஆக்கத்தினை இவ் இதழில் பதிவு செய்கின்றது.

## டெம்பிள் கிராண்டின் (Temple Grandin)

ஒட்டிசம் (Autism) என்பதனை தமிழில் "தற்புனைவு ஆழ்வு" (தற்சிந்தனை) என அழைப்பர். அதாவது தனக்குள்ளேயே ஒரு உலகத்தை உருவாக்கி அதில் ஆழ்ந்து விடுவது என பொருள்படும் யதார்த்தத் தில் இருந்து விலகி ஒடுதல் எனவும் கூறுவர். ஒட்டிசம் ஒரு குறைபாடு. பொது வாக ஒரு மனிதன் பார்ப்பது கேட்பது தொடுவது போன்றவற்றின் மூலம் பெறப் படும் உணர்வுகளை அவனது மூளையா னது அலசி ஆராய்ந்து புரிந்து கொள்ளும். ஆனால் ஒட்டிசக் குறைபாடுடையவர்க ளின் மூளை இது போன்ற விடயங்களை புரிந்து கொள்ளும் தன்மையினை இழப் பதினால் இவர்களின் செயற்பாடுகள் வித் தியாசமாக அமைகின்றன. இதனால் இவர் களின் நடவடிக்கைகளும் மாறி விடுகின் றன.

ஒட்டிசக் குழந்தைகள் பொதுவாக மற்

றவர்களுடன் தொடர்பு கொள்ளுதல், சேர்ந்து இயங்குதல் போன்ற செயற்பாடுகளில் விலகி இருப்பர். ஒரே செயலை திரும்ப திரும்ப செய்வது, சுழலும் பொருட்களை தொடர்ச்சியாக பார்ப்பது எனமாறுபட்ட நடவடிக்கையோடு இருப்பர். இக் குறைபாடுடைய குழந்தைளில் சிலர் அதீத புத்திசாலி ஆகவும் இருப்பர். புத்திசாலித் தனத்திற்கும் இக் குறைபாட்டிற்கும் தொடர்பு கிடையாது. 3 தொடக்கம் 5 வயதில் தான் ஒட்டிசக் குணாதிசயங்கள் வளரும். இக்காலத்திலேயே இவ் வளர்ச்சி உச்சத்தினையும் எட்டிவிடும்.

1943இல் டாக்டர் லியொ கானர் (Dr. Leo Kanner) என்பவர் தான் ஒட்டிசம் என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் அவர். "பாசமான தொடர்பை சிதைக்கும் ஒட்டிசம் (Autistic Disturbances of offective Contact) என்ற தமது ஆய்வறிக்கையினை நெர்வஸ் சைல்ட் (Nervous Child) என்ற பத்திரிகையில் வெளியிட்டாhர். இதில் தான் முதன் முதலாக ஒட்டிசப்பாதிப்புடைய குழந்தைகளின் பிரச்சினைகள் பேசப்பட்டன. இதே வேளை 1944இல் ஹான்ஸ் ஆஸ்பெஜர் (Hans Asperger) என்பவர் சற்றே வளர்ந்து பேச முடிந்த குழந்தைகளிடம் கண்டறிந்த விடயங்களை ஆய்வறிக்கையாக ஜேர்மனிய மொழியில் வெளியிட்டார்.

ஒட்டிசம் ஸ்பெக்ட்ரம் டிஸார்டர் (ASD) எனும் பெரிய குடையின் கீழ் குழந்தைகளின் மூளை வளர்ச்சியில் ஏற்படும் பல்வேறு சிக்கல்கள் தொடர்பான குறைபாடுகளை வகைப்படுத்துகின்றது. இங்கு எல்லாவற்றிற்கும் தனித் தனி பெயர் சூட்ட முடியாது என்பதனால் ஒட்டிசம் என பொதுவாக அழைக்கின்றனர்.

**ADS பிரிவுகள்**

**ஆட்டிசம் (Autism)**

ஆஸ்பெர்ஜர் ஸின்ட்ரோம் (Asperger Syndrom)

பரவலான வளர்ச்சிக் குறைபாடுகள் (PDD)

பரவலான வளர்ச்சிக் குறைபாடுகள் என்று வரையறுக்க முடியாதவை (PDD - NOS)
ரெட்ஸின்ரோம் (Rett Syntrome)

குழந்தைப்பருவ ஒத்திசைவின்மைக் குறைபாடு (Childhood Disinteyrative Disorder - CDD)

ஒட்டிசம் என்பதனை மிக துல்லியமாக வரையறுக்க முடியா

மையினால் அதற்கான சிகிச்சை முறையினையும் உறுதியாக கூற முடியாது உள்ளது. ஒருவருக்கு பயனளிக்கும் சிகிச்சை மற்றொருவருக்கு பயனளிக்கும் என்பது நிச்சயம் இல்லை.

டாக்டர் லியோ கானரின் ஆராய்ச்சியில் முதன் முதலாக கண்டறியப்பட்ட ஒட்டிசப் பாதிப்புடைய குழந்தையான டோனால்ட் (Donold Triplett) என்பவர் முழுமையாக குணமடைந்து இயல்பான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார் என்ற தகவல் 2010இல் கண்டறியப்பட்ட போது அது ஒட்டிச குழந்தைகளின் பெற்றோருக்கு ஒரு நம்பிக்கையினை தந்தது. ஒட்டிச பாதிப்புக்குள்ளாகி இருக்கும் குழந்தைகளின் பெற்றோர் குழந்தைகளின் எதிர்காலம் குறித்து கவலைப்பட்டு சோர்ந்து விடத் தேவையில்லை என்பதற்கு ஒட்டிசத்தின் பிடியில் சிக்கிக் கொண்டாலும் உலகத்தின் பார்வையை தன்பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த சாதனையாளர்களின் வரலாறுகள் உங்கள் குழந்தைகளின் எதிர்கால பாடப் புத்தகங்களாக அமைகின்றன. இப் பாடப்புத்தகத்தை நம்பிக்கையுடன் கற்பிக்கும் ஆசிரியராய் நீங்கள் இருந்தால் உங்கள் பிள்ளைகளையும் நாளை சாதனையாளர்களாக ஆக்க முடியும்.

**டெம்பிள் கிராண்டின்**
**(Temple Grandin)**

இவர் 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி அமெரிக்காவின் பொஸ்டன் (Bostan Massachusetts - USA) நகரில் றிச்சாட் கிறாண்டின் (Reichard Grandin) அனா ஸ்ராசியா பேப்ஸ் (Anna Eustacia purves) தம்பதியினருக்கு மகளாக பிறந்தார். விலங்கியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றுள்ள இவர் கொலராடோ பல்கலைக்கழகத்தில் விலங்கியல் துறை பேராசிரியராக பணியாற்றி வருகின்றார். விலங்கு வளர்ப்பு தொடர்பான பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார். தனது பேச்சின் ஊடாகவும் எழுத்தின் ஊடாகவும் ஒட்டிசம் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தின் பார்வைக்கு கொண்டு வருகின்றார். 2010ஆம் ஆண்டு ரைம்ஸ் பத்திரிகை சிறந்த 100 மனிதர்களைத் தெரிவு செய்த போது அதில் ஒருவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். 2011ஆம் ஆண்டு (Double Helix Medal) இரட்டை கெலிக்ஸ் பதக்கத்தை பெற்ற டெம்பிள் 2015இல் தொழில் நுட்ப தொடர்பாடலின் கௌரவ பிரஜையாக போற்றப்பட்டார்.

டெம்பிள் கிராண்டின் இரண்டு வயதில் ஒட்டிச பாதிப்புக்கு உள்ளாகி

இருந்தார். எனினும் இவரது தாயார் டெம்பிள் கிராண்டினுக்கு 15 வயதாக இருக்கும் போது அமெரிக்க உளவியல் நிபுணரும், ஒட்டிச ஆராய்ச்சி நிறுவனத்தின் ஸ்தாபகருமான வைத்திய கலாநிதி பேனாட்றிம்லான்ட் (Dr. Bernard Rimland) அவர்களால் வழங்கப்பட்ட படிவத்தை பூர்த்தி செய்த போது தன்மகளுக்கு ஒட்டிச பாதிப்பு உள்ளதை அறிந்துகொண்டார். இருப்பினும் 40 வயதில் தான் இவருக்கு ஒட்டிசம் உள்ளது என்று மருத்துவர்களால் உறுதி செய்யப்பட்டது. இவரது குடும்பம் நிதி வசதி மிக்கதாக இருந்தமையால் தாயார் இவருக்கு 2 1/2 வயதாக இருக்கும் போது பேச்சுப்பயிற்சிக்கும், 3 வயதாக இருக்கும் போது இவருடன் சேர்ந்து விளையாடுவதற்கும் உதவியாளர்களை நியமித்தார். பெற்றோர்களின் தொடர்ச்சியான கவனிப்பும் சிறந்த ஆசிரியர்களின் அரவணைப்பும் இவருக்கு கிடைத்தமையால் 4 வயதில் பேசத் தொடங்கினார்.

இவரது தாயார் Dedham Country Day School பாலர் பாடசாலையில் தனது மகளுக்கு ஏற்றவாறான விசேட வகுப்பை ஆரம்பித்து நன்கு கவனிக்கக் கூடிய இரக்க குணமுள்ள ஆசிரியர் ஒருவரையும் நியமித்தார். இவ் ஆசிரியரது அற்பணிப்பான செயற்பாடு டெம்பிள் கிராண்டினின் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டது எனலாம். இவர் 7,8,9 ஆம் வகுப்புக்களை Beaver Country day school பாடசாலையில் பயின்றார். இக் காலப்பகுதியில் புத்தகத்தால் சக மாணவர்களுக்கு வீசுவதால் ஏற்பட்ட எதிர்ப்புக்கள் திரும்ப திரும்ப கதைப்பதினால் சக மாணவர்கள் றெக்கோடர் (Tape Recorder) என அழைத்தமை போன்றவை அவமானங்களை இவருக்கு ஏற்படுத்தியது. இந்த விடயம் இப்பொழுது நினைக்கும் பொழுது எனக்கு சிரிப்பை ஏற்படுத்துகின்றது என்கின்றார் டெம்பிள் கிராண்டின். சிறுவயதில் தனது செயற்பாடுகளின் மூலம் அடைந்த அவமானங்களையும் நான் அப்படி நடந்து கொண்டமைக்கான காரணங்களையும் இவர் பின்னாளில் கூறிய பொழுது உலகம் ஒட்டிசத்தின் பிடியில் இருக்கும் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது.

இவர் வாழ்வில் இடம்பெற்ற ஒரு சிறு சம்பவத்தினை பார்ப்போம். டெம்பிள் கிராண்டின் சிறுமியாக இருந்த போது ஒழுங்காக விருப்பத்துடன் பாடசாலை செல்வார். ஆர்வமுடன் விளையாடுவார் ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயம் செல்வது அவருக்கு பிடிப்பதில்லை. இதற்கு கார

ணம் எல்லா இடங்களிலும் தன் விருப்பப்படி இயல்பாக இருக்க முடிந்த இவருக்கு தேவாலயத்தில் இயல்பாக இருக்க முடியவில்லை. இதனால் பிரார்த்தனை நடக்கும் போது எழுந்து ஒடுவதும் சத்தம் போடுவதுமாக இருந்திருக்கின்றார். இதனால் குடும்பத்தினரதும் தேவாலயத்திற்கு வருவோரினதும் பாதிரியாரதும் கோபத்திற்கு உள்ளாகி இருக்கின்றார். வளர்ந்த பிறகு தான் தேவாலயத்தில் அப்படி நடந்து கொண்டதினை அறிந்திருக்கின்றார். சாதாரண வேளைகளில் முழுக் கைச்சட்டை மற்றும் முழுக் காற்சட்டை என்பனவற்றை அணிந்து வலம் வரும் இவரை தேவாலயத்திற்கு செல்லும் போது பெற்றோர் கவுண் அணிவித்து அழைத்துச் சென்றுள்ளனர். தனக்கு பிடிக்காத ஆடையினை அணிவித்து அழைத்துச் சென்றதனாலும் உடலைப் பற்றி இருக்கும் ஆடையின் அழுத்தம் காரணமாகவும் அவ்வாறு நடந்துள்ளேன் என்பதனை இப்பொழுது என்னால் உணர முடிந்துள்ளது. என்கின்றார். டெம்பிள். இவரது இக்கருத்து ஒட்டிசக் குழந்தைகள் ஒருவித உடல் அழுத்தத்தினை மட்டுமே ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதினை உலகுக்கு அறிய வைத்தது.

இவர் 15 வயதாக இருக்கும் போது றின்ட் நியூ கம்சயா (Rindege New Hampshire) என்ற இடத்தில் உள்ள மவுன்ரின் கன்றி பாடசாலையில் (Mountain Countrey School) பழக்க வழக்கங்களை கற்றுக் கொள்வதற்காக சேர்க்கப்பட்டார். 1966 ஆம் ஆண்டு தனது பாடசாலை கல்வியினை நிறைவு செய்த டெம்பிள் கிராண்டின் Frankin Pierce College கல்லூரியில் தனது பட்டப்படிப்பினை 1970இல் பூர்த்தி செய்தார். தொடர்ந்து 1975இல் Arizona State University பல்கலைக் கழகத்தில் விலங்கியல் விஞ்ஞானத் துறையில் மாஸ்டர் டிகிரி பட்டத்தினை பெற்றார். 1989ஆம் ஆண்டு University of Illinois at Urbna - Champaign இல் விலங்கியல் விஞ்ஞானத் துறைக்கான கலாநிதிப் பட்டத்தினைப்பெற்றார். இது தவிர டெம்பிளுக்கு Carnegie Mellon University (2012) McGill University in Canada (1999) Swedish University of Agricultural Sciences (2009). Emory University (2016). போன்ற பல்கலைக்கழகங்கள் கௌரவப்பட்டங்களை வழங்கியிருக்கின்றன.

அமெரிக்க நாசா பணியாளர்களில் ஒருவரான விஞ்ஞான ஆசிரியர் வில்லியம் காலக் (William Carlock) என்பவர் டெம்பிள் கிராண்டின் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒருவராக திகழ்ந்தார். இவரது ஆதரவு

டெம்பிள் ஒட்டிச குழந்தைகளுக்காக ஹக் மெசின் (Hug Machine) எனும் இயந்திரத்தை உருவாக்க காரண மாக இருந்தது. ஒரு நபரால் தாங்கக் கூடிய அதிக பட்ச அழுத்தத்தை இவ் இயந்திரத்தின் ஊடாக ஒட்டிச பாதிப் புக்குள்ளானவர்களுக்கு அளிப்பதன் ஊடாக அவர்களது உணர்திறன் (Sensitivity) பிரச்சினைக்கு ஓரளவு தீர் வினை பெற்றுக் கொடுக்கலாம் என நம்பப்படுகின்றது. டெம்பிள் ஒட்டிச குழந்தைகள் சரியான வழியில் பய ணிக்க ஏதுவாக பல ஆசிரியர்களை யும் உருவாக்கியுள்ளார்.

உலகப் புகழ் பெற்ற ஒட்டிச பேச்சா ளரான டெம்பிள் கிராண்டின் ஒட்டி சம் தொடர்பான தனது கன்னிப் பேச் சினை 1980ஆம் ஆண்டு அமெரிக்க ஒட்டிச சங்கத்தின் ஸ்தாபகர் றுத் சி சுலிவன் (Ruth C. Sulllivan) என்பவரது வேண்டுதலை ஏற்று நிகழ்த்தினார். தொடர்ந்து ஒட்டிசம் தொடர்பான பல விடயங்களையும் அனுபவங்களை யும் தனது பேச்சின் ஊடாக சமூகத் திற்கு தெரியப்படுத்தினார்.

டெம்பிள் சிறந்த பேச்சாளராக மட்டுமன்றி மிகச் சிறந்த எழுத்தா ளராகவும் விளங்குகின்றார். ஒட்டி சம் தொடர்பாகவும் விலங்கியல் தொடர் பாகவும் பல கட்டுரைகளை பத்திரி கைகள் வாயிலாகவும் நூல்கள் மூல மாகவும் சமூகத்தின் பார்வைக்கு தந் துள்ளார். ஒட்டிசம் தொடர்பாக இவர் எழுதிய Thinking in pictures எனும் புத்தகம் 1995இல் வெளிவந்தது. இதன் விரிவான பதிப்பு 2006 வெளிவந்தது. இதில் ஒட்டிச சிந்தனை பற்றிய விட யங்கள் தெளிவுபடுத்தப்பட்டு இருக் கின்றது. இது தவிர 2013இல் இவரால் எழுதி வெளியிடப்பட்ட The Autistic Brain எனும் புத்தகமும் சிறப்புடையது இப் புத்தகங்கள் ஒட்டிசம் தொடர்பான பல விடயங்களை உலகம் அறிய கார ணமாய் அமைந்தது.

டெம்பிள் விலங்கியல் தொடர்பாக வும் பல நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் 1993இல் வெளிவந்த Livestock Handling and Transport எனும் பண்ணை மிருகங்களை கையாளு தல், அவற்றை ஏற்றி இறக்கல் தொடர் பாக எழுதப்பட்ட புத்தகம் சிறப்புடை யது. இப் புத்தகமானது 2000, 2007, 2014ஆம் ஆண்டுகளில் மீள்பதிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர் மிருகங்களின் பிரச்சினைகள் சம்மந்தமாக ஆய்வுகளை மேற்கொண்டு எழுதிய கட்டுரைகள் பத்திரிகை களில் வெளிவந்துள்ளன. டெம்பிளி னால் விலங்கியல் தொடர்பாக எழு தப்பட்ட நூல்கள் மற்றும் கட்டுரைகள் என்பனவற்றில் விலங்குகளின் கழுத்து உரோமங்களின் ஒட்டம், இறைச்சிக்

காக வெட்டப்படமுன் அவற்றின் மன அழுத்தம், இறைச்சி தராதரம், மதரீதியான வெட்டுகை, மிருகங்களின் மனநிலை, அவற்றின் வேதனைகளை குறைப்பதற்கான பட்டிமுறை வளர்ப்பு போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. இவரது ஆய்வுகளில் இருந்து விலங்குகளின் உணர்வுகள் தொடர்பான பல விடயங்கள் சமூகத்திற்கு வெளிக் கொணரப்பட்டது. டெம்பிள் மக்களுக்காக வழங்கப்படும் புறக்கி விருதினை (Proggy award) 2004ஆம் ஆண்டு மிருகங்களின் நீதியான சிகிச்சைக்காக பெற்றுக் கொண்டார்.

ஓட்டிச பாதிப்புள்ளவர்களின் முன்னேற்றத்திற்கு சிறு வயதிலேயே இக்குறைபாட்டினை கண்டறிதல் உரிய பயிற்சிகள் வழங்குதல் புரிந்துணர்வுடைய ஆசிரியர்களது கற்பித்தல் பெற்றோர்களது முழுமையான ஆதரவு என்பன காரணமாக அமைகின்றது என்பதனை டெம்பிள் கிராண்டின் என்பவரது வாழ்க்கைப் பாடம் கற்றுத் தந்துள்ளது.

---

**53 ஆம் பக்கத் தொடர்ச்சி... (எண் ஜோதிடம்)**

நாலும் தெரிந்தவர்கள் நாம் என நாடு புகழவேண்டும் எனும் புகழிற் போதை கொண்டவர்கள் வாய்ச் சாதுரிய மூலம் காரிய சித்தி ஏற்படல் பிறருக்கு உதவச் சென்று உபத்திரவமும் சிக்கல்களும் தக்கவைக்கும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டைக்கைவிட்டு சின்ன வீடுகளையும் சிற்றின்பத்தையும் நாடத் தலைப்படுவர். உடையவன் பாராவிட்டால் ஒரு முழம் கட்டை ஆவது போல் செய்தொழிலில் கவனமெடுப்பதுடன் ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருப்பர். குப்பையில் இருப்பது கோபுரம் செல்வது போன்றும். சிலர் திடீர் பணக்காரர்களாகவும் வேறு சிலர் நிலையில் தாழ்ந்து பரம ஏழையாகவும் மாறி விடுவர். இரகசியங்களை காப்பாற்றிக் கொள்ளமாட்டார்கள். எதிர்ப்பு உண்டு பண்ணும் செயல்களைத் தோற்றுவித்து விரோதிகளைச்சம்பாதித்துக் கொள்வர். தான் சொல்வதை பிறர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பர்.

பிறந்த திகதி : 4,13,22,31


அதிஷ்டக் கல் : கோமேதகம்

அதிஷ்ட நிறம் : நீலம்

அதிஷ்ட திகதிகள் : 1,10,19,4,12,22,31

அதிஷ்டமில்லாத திகதிகள் : 8,17,26

துணைவர் பிறந்த திகதி : 1,10,19,28




Prop. Mr. E.S.P. Nagaratnam

# Kajamugan Hardware

Leading Hardware Merchant in Jaffna Peninsula

147 - 149, Stanley Road, Jaffna.

Tel. 021 - 222 2833






1. இலக்கியம்

நந்தவனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய் குயவனை
வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி -
அதை
கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்
தாண்டி

பாடியவர் :- கடுவெளிச் சித்தர்

பாடல் :- ஆனந்தக் களிப்பு

பொருள்

நந்த வனத்திலே ஒரு பிச்சைக்காரன் பத்து மாத காலமாய் காத்திருந்து குயவன் இடத்தே ஒரு பிச்சை எடுத்து உண்பதற்கான ஒரு தோண்டியை பெற்றுக் கொள்கின்றான் . அதனை அனுபவிக்கத் தெரியாத அவன் அனைவர் முன் நிலையிலும் வைத்துக் கூத்தாடி போட்டுடைக்கின்றான். என்பது வெளிப்படையான கருத்தாக தோன்றினாலும் இதன் உட்கருத்து யாதெனில்.

நாம் இறைவன் இடத்தே நற் காரியங்களைச் செய்தற் பொருட்டு மனிதப் பிறப்பை வேண்டுகின்றோம் இதன் பெறுபேறாக பத்து மாத காலம் தாயின் கருவறையில் இருந்து இந்த பூமிக்கு வருகின்றோம் பின்னர் இறைவனிடத்தே வேண்டியதனையும் உடலில் உன்னத தன்மையினையும் மறந்தவர்களாய் சிற்றின்பங்களில் மூழ்கி சுயநல வாழ்க்கையினை வாழ்ந்து விட்டு மடிந்து போகின்றோம்.

இங்கே நாம் அனைவரும் பிச்சைக்காரர்கள் தான், நம் உடம்பு தான் அந்த தோண்டி. நாம் இந்த உடம்பை வைத்து இயலாதவர்களுக்கு எம்மால் முடிந்த உதவிகளை நல்க எண்ணுவதில்லை. இப்பாடலின் சித்தர்

சக மனிதர்களுக்கு உதவி செய்த லினையே மையப் பொருளாக்கி யுள்ளார்.

2. இத்தாலி




இத்தாலி குடியரசு (Repubblica Italina)

- தலைநகர் : ரோம்
- ஆட்சிமொழி : இத்தாலி மொழி
- அரசாங்கம் : நாடாளுமன்ற குடியரசு
- பரப்பளவு : 301318 கி.மீ
- மக்கள் : இத்தாலியன்
- மக்கள் தொகை : 59131287 (2006 கணக்கெடுப்பு)
- நாணயம் : யூரோ (EUR)

அமைவிடம்

தெற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள இத்தாலி கால்பாதம் போன்ற தீபகற்ப பகுதியினையும் மத்திய தரைக்கடல் பகுதிகளான சிசிலி மற்றும் சார்தீ வியா எனும் தீவுப்பகுதிகளையும் கொண்டது இத்தாலியின் வடக்கே உள்ள அல்பஸ் மலைப் பகுதியில் பிரான்ஸ், சுவிட்சாலந்து, ஆஸ்தி ரியா, சிலவேனியா ஆகிய நாடுகள் எல்லைகளாக உள்ளன. சான்மே ரினோ, வத்திக்கான் நகர் என்ற இரு தனி நாடுகளும் இத்தாலி நில பகு தியினுள் உள்ளன.

கிறிஸ்தவம் பிரதான இடத்தை வகிக்கின்றது.

தற்போதய இத்தாலிய குடியரசு 1946 ஜுன் 2இல் உருவானது.

இத்தாலி நாடானது 20 மண்டலங் களாக பிரிக்கப்பட்டு உள்ளது. இவற் றில் 5 மண்டலங்களுக்கு சிறப்பு அதி காரங்கள்வழங்கப்பட்டுஉள்ளன.ஏனை யவை சாதாரண அதிகாரங்களைக் கொண்டவை, இம்மண்டலங்கள் ஆட்சி நிர்வாகத்தின் பொருட்டு இரண்டு அல் லது ஒரு தடவை பிரிக்கப்பட்டு உள் ளன.

| சிறப்பு மண்டலம் | தலைநகரம் |
|---|---|
| 1. Aosta பள்ளத்தாக்கு : | Aosta |
| 2. Prluli – Venezia Glulia : | Trieste |

3. Sardinia (சார்தீனியா) : cagllari
4. Sicity (சிசிலி) : Palermo
5. Trentino – Alto Atige : Trento

இத்தாலி வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஒன்றாகவும். வாழ்க்கைத்தர நிலை அளவீட்டில் உலகில் 8 ஆவது நாடாகவும், ஐரோப்பிய ஒன்றியம், நோட்டோ அமைப்புக்களின் ஆரம்ப உறுப்பு நாடாகவும். ஜி 8 அமைப்பில் அங்கத்துவம் பெற்ற நாடாகவும் உள்ளது.

3. மூங்கில்

Botanical Name : Bambusa arundinaceae
Family : Bambusaceae
Eng : Sping Bamboo
Sinh : katu - una



உலகிலுள்ள விரைந்து வளரும் தாவரங்களுள் ஒன்றான மூங்கில் 24 மணித்தியாலங்களுக்குள் 100cm வரை வளரக்கூடியது. சராசரியாக 40M உயரம் வரை வளரக் கூடிய இத்தாவரத்தினது பருமன் 1cm- 30cm வரை காணப்படும். இதன் ஆயுட் காலம் 60 ஆண்டுகள். புல்லினத் தாவரமான மூங்கிலில் 700 சாதிகளும், 1450 இனங்களும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மூங்கில் அமெரிக்கா, ஆபிரிக்கா, வடக்கு அவுஸ்திரேலியா, இந்தியாவின் இமாலயப் பிரதேசம் கிழக்கு ஆசியா போன்ற பிரதேசங்களில் வளர்கின்றது. இலங்கையிலும் பல பிரதேசங்களிலும் இதனைக் காணலாம்.

மூங்கிலினை 1 - 1.5m இடைவெளியில் நடுகை செய்யலாம். இதன் வளர்ச்சிக்கு நிறைவான நீர், பசளை என்பனவற்றோடு 5 மணித்தியாலய சூரியஒளியும் தேவை. இதன் இலைகள் வெளிர்பச்சை வர்ணம் கொண்டு குறுகலாக காணப்படும். பூக்கள் மஞ்சள், மற்றும் பச்சைமஞ்சள் நிறங்களில் காணப்படும். இவை 30 வருடங்களுக்கு ஒரு முறை பூத்துக் காய்க்கும். வேர்க்கன்றுகள் மூல மாக இதனை இன விருத்தி செய்யலாம்.

மூங்கில் வீடுகள் கட்டவும், பாலங்

கள் அமைக்கவும் பயன்படுத்தப்படு கின்றது. எமது நாட்டில் இதன் ஒரு துண்டினை பிட்டுக்குழல் தயாரிக்கப் பயன்படுத்துகின்றனர். மேலும் புல் லாங்குழல் தயாரிக்கவும் இது சிறப்பு டையது. மேலும் பெட்டிகள் காதுக் கம்மல் கைகளுக்கான வளையல் கள் என்பனவற்றைத் தயாரிக்கவும் மூங்கிலினை பயன்படுத்துகின்றனர்.

சீனாவில் கறுத்த மூங்கில் தண் டினைப் பயன்படுத்தி சிறுநீரக நோயி னைக் குணப்படுத்துகின்றனர். இந் தோனேசியாவில் தண்டுப்பகுதியில் இருக்கும் நீரினைப் பயன்படுத்தி எலும்பு தொடர்பான நோய்களைக் குணப்படுத்துகின்றனர். யப்பானில் மூங்கிலின் இளம் குருத்துப்பகுதி யினை உணவைப் பாதுகாக்கப் பயன் படுத்துகின்றனர்.

மருத்துவச் சிறப்புகள்

மூங்கில் அரிசியை சமைத்து உண்டு வர பித்தம் தொடர்பான நோய்கள் நீங்கும். இரத்தத்தில் கொலஸ்ட்ரோ லைக் கட்டுப்படுத்தும்,

மூங்கில் சாறு புண்ணில் உள்ள கிருமிகளை அழித்து புண்ணை குணமாக்கும்.

மூங்கில் பாயில் படுத்து உறங் கினால் உஸ்ன மற்றும் சிறு நீரக நோய்கள் வருவதை தடுக்கலாம்.

இவ்வாறான பல் பயன்தரும் மூங்கிலினை நடவு செய்து யாவரும் பயன்பெற வேண்டும்.

**4. காகம்**

| | |
|---|---|
| உயிரியல் | வகைப்பாடு |
| திணை - | விலங்கினம் |
| தொகுதி - | முதுகு நாணி |
| வகுப்பு - | பறவை |
| குடும்பம் - | கார்விடே |

உலககில் 40 இன காக்கைகள் உள்ளன. அவுஸ்திரேலியா வட அமெ ரிக்கா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆசியா என காக்கை இனங்கள் வகைப்ப டுத்தப்பட்டுள்ளன. கரியன் காகம், வீட்டுக் காகம் என்பன ஆசிய காக்கை இனங்கள் ஆகும்.

காக்கைகள் எந்த பருவ நிலை யுள்ள கண்டங்களிலும் வாழக் கூடி யவை முதன் முதலில் மத்திய ஆசி யாவில் தோன்றியதாக கூறப்படும் காக்கைகள் பின்னர் வட அமெரிக்கா ஆபிரிக்கா ஐரோப்பா, அவுஸ்திரே லியா போன்ற பிரதேசங்களுக்கு பர வியதாக கருதப்படுகின்றது. காகங்க ளின் ஆயுட் காலம் இருபது ஆண் டுகள் காகங்கள் கூடுகட்டி முட்டை யிட்டு குஞ்சு பொரிக்கின்றன.

பறவைகளில் அறிவுத்திறன் கூடிய பறவையாக காக்கை விளங்குகின்

றது. இது மக்கள் வாழும் இடங்களில் கூட்டமாக இருந்து கொண்டு அவர்கள் போடும் குப்பைகளையும் வீண் பொருட்களையும் உண்பதால் சுற்றுப் புறச் சூழலை பாதுகாப்பதில் காக்கை பங்கு பெறுகின்றது. அனைத்தும் உண்ணியாகிய காக்கைகள் தானியங்கள், புழுக்கள், விதைகள், தவளை, நண்டு, பூச்சிகள் மற்றும் இறந்த உடல்கள் என்பனவற்றையும் உணவாக உட்கொள்ளுகின்றன. அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தில் உள்ள ஒரு வகை காக்கை நச்சுத் தன்மையுள்ள தேரைகளை பிடித்து அவற்றின் தொண்டையினை கிழித்து நஞ்சை நீக்கிவிட்டுஅத்தேரையினை உணவாக உட்கொள்ளுகின்றது.

வீட்டுக் காகம் அல்லது கொழும்புக் காகம் என அழைக்கப்படும் காக்கை இனம் ஆசியாவினை தாயகமாகக் கொண்டது. கப்பல் போக்குவரத்தின் காரணமாக இன்று உலகின் பல இடங்களிலும் இவை பரவிக் காணப்படுகின்றன. இக் காக்கைகளின் நெற்றி, உச்சி தொண்டைப் பகுதி மேல்மார்பு என்பன மினுக்கமான கடும் கறுப்பு நிறத்தையும் கழுத்து மற்றும் மார்புப் பகுதிகள் சாம்பல் கலந்த மண்ணிறத்தையும் இறகுகள் வால், கால்கள் என்பன கரு நிறத்தையும் கொண்டு காணப்படுகின்றன. தமிழர்களின் பண்டைய பண்பாட்டில் சமைத்த சாதத்தின் முதல் பங்கு வீட்டுக் காகத்திற்கு வைக்கப்பட்டு அதன் பின்பு வீட்டில் இருப்பவர்களுக்கு உணவு பரிமாறப்படும் வழக்கம் இருந்தது.

**5. யாழ்ப்பாணக் கோட்டை**



1619ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசு போத்துக்கீசரின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது. இதனை அடுத்து நல்லூரில் இருந்த தலை நகரம் யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டது. இதனைப் பாதுகாக்கும் பொருட்டு 1625 இல் போர்த்துக்கீசர் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென் விளிம்பில் உள்ள கடல் நீர் ஏரியின் கரையில் யாழ்ப்பாணக் கோட்டையினை அமைக்கத் தொடங்கினர்.சதுரவடிவினதான இக்கோட்டை 1629 இல் போத்துக்கீசரின் உபயோகத்தில் இருந்தது. எனினும் 1637வரை இதன் கட்டுமானப்பணிகள் பூர்த்தியடையாத நிலையே காணப்படதது.

இந் நிலையில் 1658ஜுன் 22இல்

யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய ஒல்லாந்தர் மறுநாளே கோட்டையினையும் தம் வசப்படுத்தினர். பின்னர் இக்கோட்டையினை இடித்த ஒல்லாந்தர் ஐங்கோண வடிவில் புதிய ஒர் கோட்டையினை அதே இடத்தில் 1680 இல்அமைத்தனர்.இக்கோட்டையின் வெளி அமைப்பு மற்றும் சுற்றுக் கட்டமைப்புக்கள் என்பன 1792இல் தான் கட்டி முடிக்கப்பட்டது. இந்நிலையில் 1795 செப்டம்பர் 28இல் இவ் மாபெரும் கோட்டையினை பிரித்தானியர் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணக் கோட்டை ஐந்து கொத்தளங்களைக் கொண்டது. இவை நெடும் மதில்களினால் இணைக்கப்பட்டுஇருந்தன.இம்மதில் ஒவ்வொன்றினதும் நீளம் சராசரியாக 554 அடிகள் வரை காணப்பட்டது. கொத்தளங்களின் சுற்றளவைத்தவிர்த்து சுற்று மதிலின் மொத்த நீளம் 3960 அடிகளாகும். முக்கோண வடிவில் ஐந்து கொத்தளங்களையும் உள்ளடக்கிய உட்கோட்டையின் சுற்றளவு 6300அடிகளாகும். மதில் வெளிப்புறம் 6அடி அகலத்திலும் உட்புறம் 4அடி அகலத்திலும் கட்டப்பட்டு இருந்தது. இக் கட்டுக்களுக்கு இடைப்பட்ட பகுதி மணலால் நிரப்பப்பட்டு உள்ளது. இம் மதில்கள் அகழி மட்டத்தில் இருந்து 30அடி உயரமானவை இவை எவ்வளவு வலிமை வாய்ந்த பீரங்கிகளாலும் தகர்க்க முடியாதவை.

உட் கோட்டையினை சுற்றி உள்ள அகழி சுரியும் நீரும் கொண்டது உயர் கொத்தளப்பகுதியில் அகழியின் அகலம் 132 அடிகளாகவும் மதிலின் நடுப்பகுதியில் 158 அடிகளாகவும் காணப்பட்டது. கோட்டையின் சுற்று மதிலைச் சூழ்ந்து 6400அடிநீளமான அகழியின் வெளிச்சாய்வுச் சுவர் அமைந்துள்ளது.

அகழி வெளி மதில் சாய்வு சுவரோடு தாழ் கொத்தளங்கள் அமைந்துள்ளன. இவை கோட்டையின் மதிலின் நடுப்பகுதிக்கு நேர் எதிரே அகழிக்கு அப்பால் அமைந்துள்ளன. இதன் உட்புறத்தில் ஒடுங்கிய பாதைகள் காணப்படுகின்றன. தாழ் கொத்தளங்களில் 19 காவல் அரண் கூடுகள் இருந்தன. தாழ் கொத்தளங்களே எதிரியின் வருகையை முதலில் தடுக்கும் தடுக்க முடியாத இடத்து உயர் கொத்தளங்கள் செயற்படும்.


இக் கோட்டையானது சுண்ணக் கற்களினாலும் முருகைக் கற்களினாலும் கட்டப்பட்டது. கோட்டையின் வாயிலில் 6 அங்குல தடிப்பான மரக் கதவு காணப்பட்டது. இதில் போர் யானைகள் முட்டி பிளக்காத வகையில் கூரான ஈட்டி முனைகள் பொருத்

தப்பட்டு இருந்தன. வில் வளைவான வாயிற் கடவையில் இருந்து அகழியைக் கடப்பதற்கு தொங்கு பாலம் அமைக்கப்பட்டு இருந்தது.

கோட்டையின் உள்ளே வட பகுதியில் போத்துக்கீசரால் கட்டப்பட்ட கத்தோலிக்க தேவாலயம் ஒல்லாந்தரால் புதுப்பிக்கப்பட்டது. அதிகாரிகளின் நிர்வாகப்பகுதி, கவர்ணர் பங்களா, ராணி மாளிகை, கிளைக் கூடங்கள் என்பனவும் படையினரின் பயிற்சிக்கான நான்கு ஏக்கர் பரப்பளவைக் கொண்ட மைதானமும் கோட்டையின் உள் காணப்பட்டது. இவ் யாழ்ப்பாண கோட்டையானது நீர்வழி நில வழி என இருவாயில்களைக் கொண்டிருந்தது. நீர்வழி ஊடாக வரும் ஒருவர் மதில் அருகே படகை நிறுத்தி விட்டு நீர் வழி ஊடாக காவலர்களின் அனுமதியுடன் கோட்டையினுள் நுழைய முடியும். வாயிற் சுவரின் மேல் மணிக் கோபுரம் ஒன்று கட்டப்பட்டு இருந்தது.

தொழில் நுட்ப நேர்த்தி மிக்க இவ் யாழ் கோட்டையானது. 1980 வரை நல்ல நிலையிலேயே இருந்தது. பின்னர் நாட்டில் ஏற்பட்ட உள் நாட்டுப் போர் காரணமாக இது சிதைவடைந்துள்ளது. இன்றும் இக் கோட்டையினை யாழில் காணலாம்.

## 6. கல்லடி வேலுப்பிள்ளை



ஆசுகவியென ஈழத்தமிழர்களால் போற்றப்பட்ட கல்லடி வேலுப்பிள்ளை யாழ்ப்பாணத்தில் உள்ள வசாவிளான் எனும் ஊரில் 1860ம் ஆண்டு மார்ச்மாதம் 7ம் திகதி கந்தப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். கல்லடி வேலுப்பிள்ளை என்னும் அடைமொழியுடன் அழைக்கப்படும் இப் பெயர் வந்தமைக்கான காரணம் இப்புலவரின் வீட்டின் அருகே ஒரு பெரிய கருங்கல் இருந்தது என்றும் அக் கல்லில் ஆசனம் போன்ற பகுதியில் இருந்தே இப் புலவர் கவிப் பாடல்கள் மற்றும் நூல்கள் என்பனவற்றை எழுதுவது வழமை. இதனால் அவ்வூரார் இவரை

கல்லடி வேலுப்பிள்ளை என அழைத்தனர்.

ஆரம்பக் கல்வியினை அகஸ்டீன் என்ற கிறீஸ்தவரிடம் பயின்ற வேலுப் பிள்ளை பின்னர் நமசிவாயம் புல வர் வித்துவான் கதிர்காம ஐயர் ஆகி யோரிடம் தமிழ் மொழியை கற்று புலமை பெற்றார். அத்தோடு வடமொழி யினையும் கற்றுத் தெரிந்து கொண் டார்.

சிறு வயது முதலே கவிதை பாடல் கள் ஆராய்வுக் கட்டுரைகள் என்ப னவற்றை ஆர்வமுடன் எழுதினார். சொந்தமாக ஒரு பத்திரிகையினை வெளியிட வேண்டும் என ஆர்வம் கொண்ட இவர் சென்னை சென்று அச்சியந்திரம் ஒன்றினை வாங்கி யாழ்ப்பாணம் கொண்டு வந்து அவ் அச்சியந்திரத்தின் உதவியுடன் 1902ம் ஆண்டு சுதேச நாட்டியம் என்ற பத் திரிகையை வெளியிட்டார். அக் காலத் தில் ஈழத்தில் இடம்பெற்ற அரச சமூக தவறுகளை சுட்டிக்காட்டி கண்டனம் தெரிவிப்பதில் இப் பத்திரிகை முதன்மை பெற்றது. இப் பத்திரிகையில் வெளி யான அரச கண்டன செய்தியினால் 1910ம் ஆண்டு சிறைசெல்லவும் நேரிட் டது.

நினைத்த பொழுதில் அருவியாய் கவி கொட்டும் ஆற்றலைப் பெற்றி ருந்தமையினால் மக்கள் இவரை "ஆசுகவி" என அழைத்தனர். ஆயிரக் கணக்கான பாடல்களை இவர் எழுதி யுள்ளார். இவர் எழுதிய நூல்களுள் கதிரமலை பேரின்பக் காதல் மேலைத்தேய மதுமான வேடிக்கை கும்மி, உரும்பிராய் கருணாகர விநா யகர் தோத்திர பாமாலை என்பன வும் யாழ்ப்பாண வைபவ கௌமு தியும் புகழ் பெற்றவை.

உரைநடை எழுதுவதில் சிறந்து விளங்கிய இவர் நாவலருடைய காலத்திற்கு பின்னர் தமிழ் வசன நடைக்கு செழுமை ஊட்டியவராக திகழ்கின்றார் கண்டன நூல்கள், வரலாற்று ஆய்வு நூல்கள் என்பனவற்றையும் எழுதியுள்ளார்.

தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக் கும் அளப்பரிய சேவையாற்றிய வேலுப் பிள்ளை 1944ஆம் ஆண்டு தனது 84வது வயதில் இறைவனின் திரு வடிப் பேற்றைப் பெற்றார்.


#### 7. இலங்கையின் பெயர்கள்

இந்து சமுத்திரத்தின் முத்து, இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனச் சிறப் பிக்கப்படும் இலங்கை குடியேற்றவாத காலம் தொடக்கம் 1972வரை சிலோன் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. பின் இது ஸ்ரீ லங்கா என அழைக் கப்படுகின்றது.

இலங்கைக்கு வழங்கும் பெயர் விபரம் வருமாறு.

| பெயர் வழங்கியோர் | மூலமொழி |
|---|---|
| இலங்கை | தமிழர் |
| இலங்காபுரி | இயக்கர் |
| ஸ்ரீ லங்கா | சிங்களவர் |
| செரெண்டிப் | அராபியர் |
| லங்காதுவீபம் | வடமொழி |
| நாகதீபம் | நாகர் |
| தம்பபண்ணி | ஆரியர் |
| தப்பிரபேன் | யவனர் |
| ஈழம் | தமிழர் |
| லங்கா | வடமொழி |
| லங்காவ | சிங்களவர் |
| தர்மதீபம் | நாகர் |
| சேலான் | போத்துக்கீசர் |
| சிலோன் | ஆங்கிலேயர் |
| தப்ரபோன் | கிரேக்கர் |

**8. சிறுநீரகக்கற்கள்**




வெய்யில் காலத்தில் ஏற்படும் நோய்களுள் ஒன்றாக சிறு நீரகக்கற்கள் காணப்படுகின்றன. இக் கற்கள் சிறுநீரகம், மற்றும் அதனுடன் இணைந்த சிறுநீரகக் குழாய், சிறுநீர்பை, சிறுநீர் குழாய் ஆகியவற்றிலும் காணப்படுகின்றன. நாம் குடிக்கும் தண்ணீர், உண்ணும் உணவு என்பனவற்றில் கல்சியம் பாஸ்பேட் ஆக்சலேட் யூரியா போன்ற பல தாது உப்புக்கள் உள்ளன. உணவுசெரிமானம் அடைந்த பின் இவை யாவும் சிறுநீருடன் வெளியேறி விடுகின்றன. சில சமயங்களில் இவற்றின் அளவு இரத்தத்தில் அதிகரிக்கும் போது சிறுநீரில் வெளி யேறுவதற்கு சிரமப்படும் இவ்வேளை சிறுநீரகம் சிறு நீரகக் குழாய் சிறு நீர்ப் பை போன்ற இடங்களில் இந்த உப்புக்கள் படிந்து திரள்வதனால் சிறுநீர்கல் உருவாகின்றது. இக் கற்கள் சிறுகடுகு அளவில் ஆரம்பித்து பெரிய நெல்லிக்காய் அளவிற்கு வளர்ந்துவிடுகின்றன.

சிறுநீர் கல் தோன்றுவதற்கான காரணங்கள்

- அதிக வெய்யிலில் செல்வது
- போதுமான அளவு தண்ணீர் குடிக்காமை உடலில் ஏற்படும் நீர் வறட்சி
- உப்பு மிகுந்த உணவுகளை அடிக்கடி சாப்பிடுவது

- சிறுநீரகப் பாதையில் ஏற்படும் நோய் தொற்று
- உணவு மற்றும் குடிநீரில் கல்சியம்
- குளோறையிட் அதிகமாக இருப்பது
- சிறுநீர் கழிப்பதை தள்ளிப்போடுவது
- உடல் பருமன்
- பரம்பரை
- பேராதைராய்டு கார்மோன் அதிகமாகச் சுரப்பது

சிறுநீரகப் பாதையில் உருவாகும் கல்லானது சிறுநீர் ஒட்டத்தை தடை செய்வதால் சிறுநீரானது சிறுநீரகத்திலோ சிறுநீர்பையிலோ தேங்கும். இது சிறு நீரகத்திற்கு அழுத்தத்தை கொடுப்பதனால் சிறுநீரகமானது வீக்கமடைகின்றது. இதை ஆரம்ப நிலையில் கவனிக்காது விடின் சிறுநீரகம் செயலிழந்து போகும் நிலை ஏற்படலாம்.

சிறுநீரகத்தில் கல்லிருந்தால் ஆரம்பத்தில் எந்த அறிகுறியினையும் காட்டாது. கல்நகரும் போது சிறு நீர்க் குழாயில் அடைப்பை ஏற்படுத்தும் போது தான் வலியை ஏற்படுத்தும். இவ்வலியானது முதுகில் விலா எலும்புக்கு கீழ் திடீரென கடுமையாகி முன்வயிறு வரை பரவும். சிறுநீரகக் குழாயில் கல்லிருந்தால் அடி வயிற்றில் வலிதோன்றி பிறப்புறுப்புக்கு பரவும். சிறுநீரக பையில் கல்லிருந்தால் தொப்புளுக்கு கீழ் வலிக்கத் தொடங்கி சிறுநீர் வெளியேறும். புற வழித்துவாரம்வரை பரவும். சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல்வலி என்பன இருப்பதுடன் குமட்டல் வாந்தி போன்றனவும் காணப்படும்.

சிறுநீரகக்கல்லை கண்டறிவதற்கு அல்ட்ராசவுண்ட் ஸ்கென், சி.டி ஸ்கேன் போன்ற பரிசோதனைகளை செய்து அறியலாம். இதன் முடிவை கொண்டு எவ்வாறான சிகிச்சை அளிக்கலாம் என மருத்துவர்கள் முடிவு செய்வர்.

வகைகள்

- கல்சியம் கற்கள்
- யூரிக் ஆசிட் கற்கள்
- சிஸ்டின் கற்கள்
- ஸ்டுரூவை கற்கள்

இவற்றில் கல்சியம் கற்களே அதிகமானோரை பாதிக்கின்றது.

சிறுநீரகக் கற்கள் இருப்பதற்கான சாத்தியம் இருப்பின் அதிகளவு தண்ணீரை உட்கொள்வது அவசியமானது. அத்துடன் மருத்துவரின் ஆலோசனையும் சிகிச்சையும் அவசியமா

கிறது.

9. பட்டம் விடுவோம்

அன்றைய காலத்தில் பட்டம் விடுதல் ஒரு முக்கிய பொழுது போக்கு விளையாட்டாகக் காணப்பட்டது. பெரும்பாலும் நவம்பர் மாதப் பிற்பகுதியில் ஆரம்பிக்கும் பட்ட காலம் தைப் பொங்கல் வரை நீடிக்கும். இக்கா லத்தில் பல வண்ணப் பட்டங்கள் வானில் வலம் வருவதைக் காண லாம். கடதாசிப் பட்டம் , நான்கு மூலைப் பட்டம், கொக்குப் பட்டம் , பிராந்து ப்பட்டம், எட்டு மூலைப்பட்டம் என பல வகைகளில் பட்டங்கள் கட்டப்பட்டு ஏற்றப் படுகின்றன.

ஒரு பட்டத்துடன் மேலும் சில பட்டங்களை தொடுத்து வானில் ஏற்றும் செயற்பாட்டினை பட்டம் தொடுத்தல் எனக் கூறுவர். சிலர் பட்டத்துடன் மின் குமிழினைப் பொருத்தி ஏற்றுவர். இது இரவு வானில் அழகாக இருக்கும். இச் செயலின் போது மின்கலத்தை பட்டத்துடன் இணைப்பதே நன்று. மின் வயறினை பொருத்துவதானது ஆபத்து மிகுந்தது. பட்டம் அறுஞ் சந்தர்ப்பத்தில் மின்சாரம் தாக்க வாய்ப்புள்ளது. ஏற்றப்பட்ட பட்டமானது காற்றுக் குறையும் பொழுது கீழே விழுந்து விடும். இதனை பட்டம் படுதல் என்பர்.

இன்றும் பொங்கல் காலத்தை ஒட்டி பருத்தித்துறை பகுதியில் பட்டம் ஏற்றல் போட்டிகள் இடம்பெறுவதைக் காணலாம். இக் காலத்தில் வீதியோரக் கடைகளில் பட்டங்கள், நூல்கள், இதற்கான மூலப் பொருட்கள் என்பனவற்றின் விற்பனையினையும் காணலாம். பொதுவாக மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும் ஏன் பெரியவர்களுக்கும் கூட பட்டம் விடுதல் என்றால் மகிழ்ச்சி தான்.

10. வால் வெள்ளி

விந்தைகள் நிறைந்த விண்வெளியில் வால் வெள்ளிகளும் வலம் வருகின்றன. சூரிய மண்டலத்தில் வால்வெள்ளிகளின் சுற்றுப்பாதை புளுட்டோவையும் தாண்டிச் செல்கின்றது. இவற்றுள் பெரும் பாலானவை சூரிய குடும்பத்தின் உட்பகுதிக்குள் வரும் போது நீள் வளையச் சுற்றுப் பாதையினைக் கொள்கின்றன.

சூரிய ஒண் முகில்கள் ஒடுங்கும் போது எஞ்சிய கழிவுகளே வால் வெள்ளிகள் ஆகின்றன. இவை பெரும்பாலும் பனிக்கட்டியால் ஆனவை. இதில் விண்வெளியில் மிதக்கின்ற எரிகற்கள் மற்றும் தூசிகள் என்பன ஒட்டிக் கொள்கின்றன. இதனால் இவை சாம்பல் கலந்த வெள்ளை நிறத்தில் காட்சி அளிக்கின்றன.

தூசுப் பனிப்பந்துகள் எனப்படும் இவ் வால்வெள்ளிகள் பெருமளவுஉறைந்த காபநீர் ஒட்சைட்டையும், மெதேன், அமோனியா மற்றும் நீராவி என்பவற்றைக் கொண்டுள்ளன.

ஏனைய வான் பொருட்களைப் போலவே சூரியனைச் சுற்றும் இவ் வால் வெள்ளிகள் சூரியனை நெருங்கும் போது வெப்பம் மற்றும் சூரியக்காற்றினால் தூசிப்படைகள் அதன் வால் பகுதிக்குச் செல்கின்றன. இச் சந்தர்ப்பமே வால்வெள்ளிகளுக்கு வால் உருவம் காரணமாகின்றது எனலாம். வால் வெள்ளிகளின் வால் பகுதியானது சூரியனுக்கு எதிர் திசையினிலே காணப்படும். இவ் வால்வெள்ளிகளானது சூரியனை அண்மிக்கும் சந்தர்ப்பங்களில் சூரிய வெப்பம் காரணமாக பெரும்பாலான பகுதிகள் ஆவியாகி விடுகின்றன. ஏனைய சிறு பாறைத்துண்டுகள் மற்றும் சில பொருட்கள் பூமியுள்ளிட்ட வேறு கிரகங்களில் எரி கற்களாய் விழுகின்றன.

வால் வெள்ளியானது கோள்கள் மீது மோதினால் பெரும் சேதம் ஏற்படுகின்றது. 1994 இல் shoemaker - levy 9 என்ற வால் வெள்ளி வியாழன் மீது மோதியதால் அங்கு அப்பகுதியில் வெடிப்பு ஏற்பட்டு உள்ளது. இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் வியாழனில் இடம் பெற்றமைக்கான தடயங்களை நாஸா விஞ்ஞானிகள் செய்மதிப் படங்கள் மூலம் கண்டு அடையாளமிட்டுள்ளனர். வியாழனில் மட்டுமன்றி புவியுள்ளிட்ட பல கிரகங்களிலும் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இவ்வாறான நிகழ்வுகள் நிகழ்ந்து இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

2012.09.21 இல் கண்டறியப்பட்ட ஐகான் என்ற வால்வெள்ளி 2013 நவம்பரில் சூரியனை அண்மித்துக் கடந்து செல்ல முற்பட்ட போது சூரிய ஈற்பினால் அதனுடன் மோதி உருகி அழிந்தது.

இன்று விண்வெளியில் பல வால்வெள்ளிகள் காணப்படுகின்றன. இவற்றுள் அல்லே எனும் வால் வெள்ளி 76ஆண்டுகளுக்கு ஒரு தடவை பூமியின் பார்வைக்கு தென்படுகின்றது. இன்னும் பல வால்வெள்ளிகள் விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. இதனை விஞ்ஞானிகள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். எப்போது என்ன நிகழும் என்பது அவ்வப்போது கண்டறியப்பட்டு அறிவிக்கப்பட்டு வருகின்றமை அறிவியல் வளர்ச்சியில் மனிதன் பெற்ற வரப்பிரசாதம் என்று தான் கூற வேண்டும்.

## முற்றத்து மல்லிகை

நேர்கண்டவர் - கணபதி சர்வானந்தா

# ஆன்ம பலம் கொண்ட அதிகாரியாக ஆணையாளர் வாகீசன்.

காரில் பயணிக்கின்ற போதும், ஒரு அதிகாரியாக மேசையிலிருந்து அலுவலகப் பணிசெய்கின்ற போதும், பொது இடங்களிலும் - என்று பல முறை அவரை நான் பார்த்திருக்கிறேன். இருந்தும் பா. அகிலனின்



"காலத்தின் விளிம்பு" என்ற நூல் வெளியீட்டின்போதுதான் அவரை முழுமையாகப் பார்ததுப்பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. அக்கணம் தொட்டு வலுவான இதயபலம் கொண்ட ஒரு மனிதராக என்னுள் வியாபித்துக் கொண்டவர் யாழ். மாநகர ஆணையாளர் வாகீசன்.ஏறத்தாழ இருபத்தைந்து கிளைகள் மூலம் மாநகரை நிர்வகித்து வருபவர். ஒவ்வொரு கணமும் புதுப்புது பிரச்சினைகள் தோன்றும் ஒரு நிர்வாக அலகிலுள்ளவர். அவற்றை எதிர்கொண்டு தீர்ப்புச் சொல்ல வேண்டியவராக இருப்பவர். அவர் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பிரச்சினைகளும் மக்கள் வாழ்வாதாரத்தோடு சம்பந்தப்பட்டவை. அவர் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசத்தில் முக்கிய வைத்தியசாலை, பஸ்தரிப்பு நிலையம், நட்சத்திர விடுதிகள், நீதிமன்றங்கள், பாரிய கடைத்தொகுதிகள் என மக்கள் தேவைகளோடு சம்பந்தப் பட்டவைகளைப் பட்டியல் இட்டுச் சொல்ல முடியும். தன்னால் இயன்ற வரை நிர்வாகத்தை விவேகமாகக் கொண்டு செல்ல முயற்சிப்பதை நான் நேரிலே கண்டிருக்கிறேன். அவர்

அனுபவங்கள் மிகவும் பெறுமதிமிக்கவை.அத்துடன்அவர்தனதுஇலக்கை அடைய நடத்திய போராட்டங்கள் எமது சமூகத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என்ற வகையில் "வலு" சஞ்சிகைக்கு அவரை நேர்காணப்புறப்பட்டோம். ஏற்கனவே திட்டமிட்டபடி யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியிலுள்ள மாநகரசபைக் கட்டடத்தொகுதியில் ஆணையாளர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு சந்தித்தோம். பல சிரமத்திற்கு மத்தியில் எமக்காக நேரத்தை ஒதுக்கியிருந்தார்.

வணக்கம் ஐயா! வலு என்ற சஞ்சிகையிலிருந்து வருகிறோம். கருவி நிறுவனத்தின் வெளியீடு அது. "வலு" என்ற சஞ்சிகை பற்றியும் அதனது செயற்பாடுகள் பற்றியும் அறிந்திருக்கிறீர்களா? வலுவைப் படித்திருக்கிறீர்களா? கருவியின் செயற்பாடுகள்" குறித்துத் தங்கள் கருத்து என்ன?

கருவி நிறுவனத்தையும் அவர்கள் செயற்பாடுகளைப் பற்றியும் நான் அறிவேன். ஒரு சமயம் அவர்களது நிகழ்சியொன்றில் பங்குபற்றுகின்ற சந்தர்பமும் எனக்குக் கிடைத்தது. அவர்கள் "வலு" என்ற காலாண்டு சஞ்சிகை ஒன்றையும் நடத்தி வருவதுவும் எனக்குத் தெரியும். இப்படியானதொரு சவால்கள் நிறைந்த ஒரு நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தவும் அதனூடாகச் சமூகப் பணிகளை தொடர்ச்சியாகச் செய்யவும் அத்துடன் வலு என்ற சஞ்சிகையைக் குறித்த நேரத்தில் தவறாது வெளியிடவும் அவர்களுக்கு விசேடமாக ஒரு வலு இருக்க வேண்டும். அது அவர்களிடம் உண்டு என்பது எனது கருத்து. இன்றைய சூழலில் சாதாரணமாக ஒரு வியாபார நிலையத்தையே கொண்டு நடத்துவது என்பது இயலாத காரியமாக இருக்கின்ற வேளையில் மாற்றுத் திறனாளிகளால் மாற்றுத் திறனாளிகளுக்கென்று ஒரு நிறுவனம் என்ற வகையில் கருவி நிறுவனத்தின் செயற்பாடுகள் மிக்க மகிழ்சியைத் தருகிறது.

வலு இழப்பு என்பது சிலருக்கு இயற்கையானது.சிலருக்குத்துரதிஷ்டவசமாக இடையிட்டு ஏற்படுகிறது. வலு இழப்பென்பது முழு வாழ்க்கையையும் இழந்துவிட்டதாக அர்த்தப்படாது. அதற்கு அப்பாற்ப்பட்டும் வாழ்க்கை உண்டு. அதிலும் சாதித்த மனிதர்களைப் பட்டியல் இட்டுச் சொல்லலாம்.வலு இழந்தவர்களை அறிவூட்டவும், நெறிப்படுத்தவும், வலுப்படுத்தவும் ஒரு நிறுவனம் தேவை என்று

உணரப்பட்டபோது கருவியின் உதயம் நிகழ்ந்திருக்கிறது. எனவே மாற்றத் திறனாளிகளை விழிப்பூட்டவும், அவர் களைச் செவ்வனே வழி நடத்தவும் ஒரு காட்சிப் பெட்டகமாக கருவி இருக்கின்றது. பாராட்டத்தக்கது.

உங்களுக்கு வலுவிழப்பானது எவ்வகையில் ஏற்பட்டது. அதனின் றும் மீண்டும் இயல்புக்கு வந்தது எப் போது? உங்கள் பார்வையில் மாற் றுத் திறனாளிகள் பற்றிய எண் ணம் எப்படி இருக்கின்றது?

நான் எனது மூன்றாவது வயதில் இளம் பிள்ளைவாத நோயினால் பீடிக்கப்பட்டேன். அப்போது எனது அயலார் ஒருவருக்கு வந்த நோய் வைரஸ் என்னையும் தொற்றிக் கொண்டது. பின்பு எனது பெற்றோர் களது பெரும் முயற்சியினால் நான் பாதுகாக்கப் பட்டேன். எனக்குப் பல விதமான சிகிச்சை அளிக்கப்பட்டது. எனது கால்கள் இயல்பு நிலைக்கு வரவில்லை. இருந்தும் எனது பெற் றோர்கள் எனக்கு மனோபலத்தை ஊட்டி வளர்த்தனர்.

சாதரண மனிதர்களைப்பார்த்து நாங்கள் இவர்கள் திறனாளிகள் என்று சொல்வதில்லை. வலு இழப் புடன் கூடிய நபர்களைப் பார்த்துத் தான் நாங்கள் மாற்றுத் திறனாளி கள் என்கிறோம். மாற்றுத்திறனாளி களைப் பொறுத்தவரை அவர்கள் வலுவிழப்புக்குள்ளாக்கப்படும்போது, அதாவது அவர்கள் தமது புலன் களில் அல்லது அங்கங்களின் செயற் பாடுகளில் எதாவது ஒன்றை இழக் கும்போது அவர்கள் மற்றைய புலன் கள் அல்லது அங்கங்கள் கூர் மைப்படுத்தப்படுவதாகவே நான் எண் ணுகிறேன். நான் பலரைப் பார்த்தி ருக்கிறேன். அவர்கள் நடவடிக்கைக ளையும் அவதானித்திருக் கிறேன். அவர்கள் இறை பலம் உடைய வர்கள். இறைவனின் அன்புப் பார் வையின் கீழ் உள்ளவர்கள் (Blessing in disguise)என்பது எனது எண்ணம். இந்தவகையில் சுகாதார சேவைப்ப ணிப்பாளர் நந்தகுமார் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு எனது இளமைக் காலத்து நினை வுகளை மீளாக்கம் செய்வது பொருத் தமென்று எண்ணுகிறேன். இரசாய னபாட வகுப்புகளுக்கு அவர் தந் தையார் அவரைத் தூக்கிக்கொண்டு தான் வருவார். அப்படிப்பட்ட கரடு முரடான பாதைகளைக் கடந்து வந்தே இந்த நிலையை அவர் எட்டியிருக் கிறார். அவரைப் பற்றி எண்ணு கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் அவரை நினைத்துப் பெருமைப் படுவதுண்டு.

ஒருவருக்கு வலு இழந்தபோதும் அவர் அதை பெரிதாகப் பொருள் படுத்திச் சோர்ந்து போகாது தமது முயற்சியால் முன்னேறிய பலரைப் பார்த்திருக்கிறேன். எனவே வலுவிழந்தவர் என்று அவர்களையும் அவர் திறன்களையும் குறைத்து மதிப்பிடுவதோ அல்லது அவர்களை இரண்டாவதுஇடத்தில்வைத்துப்பார்ப்பதோ ஏற்புடையதல்ல என்பது எனது கருத்து.

ஒருமுறை கருவியின் நிகழ்ச்சியொன்றைப் பார்ப்பதற்குரிய சந்தர்பம் எனக்குக் கிடைத்து. அதில் நடைபெற்ற இசை நிகழ்வொன்று எனது மனதை ஈர்த்தது. அதில்கருவிகளை இசைத்தவர்கள் மற்றும் பாடியவர்கள் எனப் பெரும்பாலானவர்கள்



மாற்றுத் திறனாளிகள். அது எனக்கொரு சாதாரணத்திற்கு அப்பாற்பட்ட (Extra Ordinary) நிகழ்வாகத் தெரிந்தது. பின்பு அவர்களை வைத்து எமது சிறுவர் பூங்காவில் சிறுவர்களுக்கான நிகழ்சி ஒன்றினை நடத்தியிருந்தோம். மிகவும் பயனுள்ளதாக இருந்ததெனப் பலர் சொன்னார்கள்.

மாற்றத்திறனாளிகளுக்கு அரசு எவ்வகையில் உதவுகிறது? அவை திட்டங்களாக மட்டும் இருக்கின்றதா? நடைமுறையில் அவை செயற்படுத்தப்படுகின்றனவா?

அரசாங்கமும் பல திட்டங்களை அவர்களுக்காக நடைமுறைப் படுத்தியிருக்கிறது. குறிப்பாக அணுகு வழி (ACCESS) என்றதை, எல்லா இடங்களிலும்இருக்கவேண்டுமென்று சட்டமாக்கி இருக்கிறார்கள். அணுகுவழி என்பதை அவர்களுக்குரிய சாதாரண பாதை என்று மாத்திரம் குறிப்பிடவில்லை. ஒரு மாற்றுத்திறனாளியானவர் ஒரு இடத்தைச் சென்றடையவோ, அறிவைப் பெறுவதையோ,திறனைப் பெறுவதையோ இந்த அணுகுவழி என்றதைக் காரணம் காட்டி அவர் தேவை மறுக்கப்படக் கூடாது என்பதற்காகவே இதைச் சட்டமாக்கி இருக்கின்றனர். ஒரு விட

யத்தை எல்லாவிதத்திலும் சென்றடைவது என்ற பொருள்படவே நான் அணுகுவழி (ACCESS) என்றதைப் பார்க்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் பற்றிய சமூகப்பார்வை எப்படி இருக்கிறது? அவர்கள் பற்றிய சரியான விழிப்புணர்வு சமூகத்திடம் உண்டா? சமூகப்பொறுப்பு எப்படி இருக்கிறது என்று கேட்கிறேன்?

முன்னையைவிட மாற்றுத்திறனாளிகள் பற்றிய விழிப்புணர்வு சமுதாயத்தில் அதிகரித்திருக்கிறது என்றுதான் நான் சொல்லுவேன். குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் பற்றிய சட்டதிட்டங்களை அரசு நடைமுறைப் படுத்தத் தொடங்கியவுடன் அதை நோக்கிய மக்கள் கவனம் அதிகரித்திருக்கிறது. குறிப்பாக அணுகுவழிகளை உண்டாக்குவது, அவர்களுக்கான வசதிவாய்ப்புகளைஏற்படுத்துவது, செயற்கை அவயவங்களை தயாரிக்கின்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் என்று சமூகத்தின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் அதிகரித்திருக்கின்றது. சமூகச் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வலுவிழந்தோர்களின் முறைப்பாடுகள் குறைந்து காணப்படுவதுவும் இதற்கான அறிகுறிகளில் ஒன்று. இருந்தும், தொழில் வாய்ப்பில் அவர்களுக்கு ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாம். ஆனால் எமது யாழ்ப்பாண மாநகரசபையைப்பொறுத்தவரை அந்த 3% வேலைவாய்ப்புகள் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற விடயம் சரிவரக்கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. சில பகுதிகளில் அப்படிப்பட்டோரை உள்வாங்குவது இயலாததாகஇருக்கலாம்.ஆனால் மாற்றுத்திறனாளிகளால் செய்யக் கூடியபணிகளுக்குஅவர்கள்உள்வாங்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

மாற்றுத் திறனாளிகளை - அவர்களும் உணர்வுள்ளவர்கள். அவர்களுக்குள்ளும் ஆசா பாசங்கள் உண்டு. அவர்களும் மற்றவர்களை ஒத்த வாழ்க்கையை வாழவேண்டியவர்கள் - என்ற அடிப்படையில் சமூகம் அவர்களை மானசீகமாக ஏற்றுக் கொள்ளுகிறதா? அல்லது அவை எழுத்துக்களில் மட்டும் வடிக்கப்பட்டவைகளாக இருக்கின்றனவா? அதாவது மக்களின் Moral Acceptance மான சீகமான அரவணைப்பு எப்படி இருக்கிறது என்று கேட்கிறேன்.

மக்கள் மனோ நிலைபற்றிய கேள்வி என்பதால் எனது மாநகரசபை அனுபவமொன்றிற்கூடாக இதை விளக்க

முற்படுகிறேன். திண்மக்கழிவுகளை அகற்றுவது தொடர்பாகப் பல விழிப் புணர்வை மக்களுக்கு ஊட்டி வருகி றோம். அதாவது கழிவுகளைப் பகுத் துப் பிரித்து வெவ்வேறாகத் தருமாறு கேட்டிருந்தும் சிலபேர் அது பற்றி கவனம் செலுத்துவதில்லை. எல்லா வற்றையும் ஒன்றாக மூட்டைகட்டித் தந்துவிடுவார்கள். அது எமக்குப் பிரச் சினையாக இருக்கும். Conscience அதாவது மனச்சாட்சியுடன் இருப்ப வர்கள் சமூகத்தைப் பற்றிய சிந்த னையும் பொறுப்புணர்வும் மிக்கவர் கள் நாம் சொல்லாமலே தாங்களா கவே சிந்தித்துச் செய்வார்கள். அப் படிப்பட்ட மனச்சாட்சியுள்ளவர்க ளால் சமூகத்தில் பிரச்சினைகளும் குறைவு. எனவே மனச்சாட்சி உள் ளவர்கள் கழிவு அகற்றுவதில் மட்டு மல்ல எல்லாவற்றிலும் அவர்கள் அதே இயல்புடன்தான் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் நிட்சயம் மாற் றுத்திறனாளிகள் விடயத்திலும் விசேட கவனம் கொண்டவர்களாகத் தான் இருப்பார்கள். எனவே மனச் சாட்சியுடையவர்கள், கருணையுள் ளம் கொண்டவர்கள் மாற்றுத் திற னாளிகளை மதிப்பதைப் பார்த்திருக் கிறேன்.

**மீண்டும் முன்னைய கேள்விக்கே செல்கிறேன். அதாவது இப்போது சாதாரண மனிதர்கள் மாற்றுத் திற னாளிகளைத் திருமணம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்திருக்கி றேன். இப்படிப்பட்ட நிகழ்வை நீங் கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? இது ஒரு அனுதாபம் சார்ந்த விடயமா? அல்லது சமூக அக்கறையா? அல் லது முன்மாதிரியாக இருக்க வேண் டுமென்ற மனப்பாங்கின் அடிப்படை யில் நிகழ்ந்த விடயமா?**

சமூகத்தில் பெரும்பகுதியாக இல் லாவிட்டாலும் நட்பின் வசப்பட்டு, நல்ல இயல்புகளால் உந்தப்பட்டு, குடும் பங்களோடு குடும்பங்களுக்கு ஏற்பட்ட உறவுகளால் ஈர்க்கப்பட்டு என்று பல விதமான காரணங்களால் இப்படிப் பட்ட திருமணங்கள் நடைபெற்றிருக் கின்றன. இருந்தும் இப்படிப்பட்ட செய் கைகளை ஒரு துணிச்சலான விட யமாகத்தான் நான் பார்க்கிறேன். இப்படிப்பட்ட முடிவை எடுப்பவர் ஒரு துணிச்சல்மிக்கவராகவே இருப்பர் என்பது எனது கருத்து. இது ஒரு அனுதாப அடிப்படையில் நடைபெற்ற விடயமா இல்லையா என்பதை அள விடுவது கஷ்டமான காரியம். ஏனெ னில் இது ஒருவரின் மனப்பாங்கு (Mind Set ) சார்ந்த விடயம்

**தாங்கள் இதுவரை பல பதவி களைத் தாண்டியே இதனை எட்**

டியுள்ளீர்கள். தாங்கள் படித்தது மற்றும் பணியாற்றியது தொடர்பான விபரங்களை கேட்கிறோம்.

யாழ்ப்பாணம் பிறந்த ஊர். படித்தது மத்திய கல்லூரியில். தந்தை ஒரு மருந்துக் கலவையாளர். தாயார் ஒரு நல்ல குடும்பப் பெண். யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பைத் தொடர 3 புள்ளிகள்வரைபோதாதிருந்தது. அதனால் திறந்த பல்கலைக் கழகத்தில் படித்து 1999இல் எனது பட்டப் படிப்பை முடித்துக் கொண்டேன். பின்பு தனியார் நிறுவனமொன்றில் வேலைக்குச் சேர்ந்து சிறிதுகாலத்தின் பின்னர் வைத்தியசாலை ஒன்றில் பணியாற்றினேன். பின்பு புறக்கோட்டை - ஐந்து லாம்படிச் சந்தியிலிருந்த பெயின்ற் கடை ஒன்றில் பணியாற்றியதைத் தொடர்ந்து, அன்று முதலாவது இடத்தைப்பெற்றிருந்த ஜோன் கீல்ஸ் நிறுவனத்தில் முகாமைத்துவப் பயிற்சியாளராக எனக்கு வேலை கிடைத்தது. அங்கு தொடர்ந்து 4 வருடங்கள் பணியாற்றியதைத் தொடர்ந்து அதன் பின்னர் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தேன். பின்பு 2003 இல் இலங்கை நிர்வாக சேவைக்குப் பயிற்றுவிக்கப்பட்டுப் பயிற்சியின் பின்னர் வடக்கு- கிழக்கு மாகாண சேவையில் மாகாணப் பொது நிர்வாக அமைச்சில் துணைச் செயலாளராகக் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டேன். 2010 இல் எனக்குப் புலமைப்பரிசில் ஒன்று கிடைத்தது. அதனூடாக இரண்டு வருடங்கள் ஜப்பான் தேசத்தில் கற்கும் வாய்ப்புக் கிட்டியது. பின்பு 2012 இல் மீண்டும் நாடு திரும்பி மாகாணசபையிலிருந்த முகாமைத்துவப் பயிற்சி நிறுவனத்தில் பணிப்பாளராக இரண்டு வருடங்கள் பொறுப்பிலிருந்த பின்பு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளராகக் கடமையாற்றி இருக்கிறேன். அப்போது மாநகரசபை ஆணையாளராகவும் பணியாற்றச் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. 2017 பெப்ரவரி மாதம் கூட்டுறவு ஆணைக் குழுவிலிருந்து விடுபட்டுத் தற்போது முழுமையாக மாநகரசபைப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

நன்றி, பயனுள்ள படிப்பினைகளைப் பெற்றுக்கொண்ட திருப்தியில் ஆணை யாளரிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டோம்.


HAAR TEX
97 C Hamden Lane, Colombo 06, Sri Lanka.

# வலு தரும் ஜோதிடம்

ஜோதிட வித்துவான் வித்தியரத்னா
V.A சிவராசா (BA)

## இராகு
## 04-எண்காரரர்

பிறந்த திகதிகள் 4, 13, 22,31

### பொதுவான குணங்கள்

மேற்குறிப்பிட்ட நான்கு தேதிகளில் பிறப்பவர் மிகுந்த வாக்கு வன்மையுடையவர்களாகக் காணப்படுவர். பேசுவதன் மூலமும் எழுதுவதாலும், உலகையும் முக்கியமாகத் தான் வாழும் சமூகத்தையும் சீர்திருத்த முற்படுவர். வாக்கில் வன்மை தான் இருக்குமேயன்றி இனிமை இராது. துடுக்காகவே அப்பிராயங்களை பகிரங்கமாகவே தெரிவிப்பர். கேட்பவர்கள் என்ன நினைப்பார்களென்று அவ்வளவாகக் கவலைப்படமாட்டார்கள். வாழ்க்கையின் ஆரம்பத்தில் இப்படி இருந்த போதிலும் அநேகர் அனுபவத்தால் திருந்தி விடுகின்றனர். தம்முடைய அபிப்பிராயத்தையே ஸ்தாபிக்க விரும்புவர். யார் எது பேசினாலும் அதற்கு மாறான விஷயங்களை உடனே கூறுவர் எதையும் ஆமோதிக்காமல் எதிர்த்தே அபிப்பிராயம் சொல்லுவார்கள். பிறர் கூறுகிற எந்தவிதமான முடிவையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் தீர விசாரித்து விவாதித்து ஆராய்ந்து வரும் முடிவையே நம்புவார்கள். எவ் விஷயத்தைப்பற்றியும் ஒரு பிரத்தியேகமாக அபிப்பிராயம் வைத்திருப்பார்கள். இந்த அபிப்பிராய மாறுதலை மனதுக்குள் வைத்துக்கொண்டு காரியத்தில் காட்ட ஆரம்பித்தாலே தான் இவர்கள் வாழ்க்கை வெற்றியடையும். இல்லையேல் இவர்கள் சதா விரோதிகளை விருத்தி செய்துகொண்டேயிருப்பார்கள். மிக்க இளகின மனமும் எல்லோரையும் நண்பர்களைப்போல் பிரியமாக நடத்தும் தன்மையும் உடைய இவர்கள் அநேக சினேகிதர்களைச் சுலபமாக சம்பாதித்துக்கொள்ள முடியும். ஆனாலும் இவ்வெண்ணிக்கையில் பிறந்த அநேகர் நண்பர்கள் உடையவர்களாகக் காணப்படவில்லை. இதன்காரணம் இவர்களது அசிரத்தையும் ஆகும். எல்

லோருடனும் பழகினாலும் ஆழ்ந்த நட்பை விரும்புபவர்களாதலால், அதற்கேற்ற சிலரையே நண்பர்களாக ஏற்றுக்கொள்வர். மிகுந்த புத்தி சக்தியுடையவர்களாதலால் இளமையிலேயே வாழ்க்கையைத் தீவிரமாக ஆராய முற்படுவர். கதைகள், சாத்திரங்கள், வேதாந்தம். மதம் சம்பந்தமான நூல்கலெல்லாம் இவர்கள் மனதை வெகுவாகக் கவரும், இவர்களுடைய மிக முக்கியமான குணம் எல்லா விஷயங்களையும் தான் அறிந்திருக்க வேண்டும் என்பது தான் எப்பாடு பட்டாவது விஷயங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பர்.

மற்ற சில எண்ணிக்கை காரர்களைப்போல இவர்களுக்குப் புகழில் ஆசையிராது மிகத்திருப்தியாக வாழவே விரும்புவர். உணவு விஷயத்தில் ரொம்பவும் சிரத்தையாக இருப்பார்கள். சாப்பாடு சிற்றுண்டி இவைகளில் தீவிரமான மன நாட்டம் இருக்கும். நோயொன்றும் இல்லாதபோதிலும் ஏதாவது பலவிருத்தி, ஆயுள் விருத்திக்கு மருந்து சாப்பிடலாமா என்று கேட்பார்கள்.

பிறர் சொல்லும், சிறு செயலும் கூட இவர்களைத் துன்புறுத்திவிடும். சீக்கிரம் மனம் நொந்து போவார்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவர்களாக இருப்பார்கள். விசாலமான இதயம் படைத்த இவர்கள் நண்பர்களிடத்து மிக்க பெருந்தன்மையுடன் நடந்து கொள்வர். பணம் சம்பாதிப்பது இவர்களுக்கு மற்ற சில எண்ணிக்கையுடை யோரைப்போன்று சுலபாக அமையாது. ஒவ்வொரு காசும் சிரமப்பட்டே தான் சம்பாதிக்க வேண்டியிருக்கும். இருந்த போதிலும் அப்படிக் கிடைக்கும் பணத்தை மிக்க குதூகலத்துடன் செலவழிப்பர். இவர்களுக்குப் பணம் செலவழிப்பதில் உற்சாகம் இருக்கும். எல்லா அழகான பொருட்களையும் வாங்கிச் சேர்க்க முற்படுவர்.

சிறு வயதில் ஒடி விளையாடக் கூடிய விளையாட்டுகளில் அதிக ஆர்வம் இருக்கும். யுவ வயதில் சுகமான வாழ்க்கையிலும் முன்னேற்றத்திலும் தீவிர ஆசை இருக்கும். வயது ஏற ஏற வேதாந்த விஷயங்களிலோ அல்லது சமூக சேவைகளிலோ தீவிர ஈடுபாடு உண்டாகும். மூன்று எண்ணிக்கைக்காரர்கள் தேசியப்போராட்டங்களிலும் வருவது வரட்டுமென இறங்கி விடுவார்கள். ஆனால் இவர்களோ தாம் கஷ்டப்படாமல் நிச்சயம் வெற்றி பெறலாம் என்று தீர்மானிக்கும் காரியங்களில் தான் இறங்குவார்கள்.

**தொடர்ச்சி 31 ஆம் பக்கத்தில்...**

# எழுதுங்கள் வெல்லுங்கள்



## போட்டி இல. 14 வினாக்கள்

1. இலங்கையில் மாகாண சபைகள் எப்போது உருவாக்கப்பட்டன?
2. இத்தாலியின் பரப்பளவு யாது?
3. தேத்தா மரத்தின் தாவரவியற் பெயர் என்ன?
4. விண்வெளியில் எக்கிரகங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் விண்கற்கள் காணப்படுகின்றன.
5. முதன் முறையாக யாழ்ப்பாணக் கோட்டை எத்தனையாம் ஆண்டு கட்டப்பட்டது?
6. 2000ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் இடம் பெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றி வெள்ளிப்பதக்கம் வென்ற செவிப்புல வலு இழந்த வீரர் யார்?
7. ஸ்டீபன் வில்லியம் காங்சிங் எழுதிய பிரபல நூல்கள் இரண்டும் எவை?
8. சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
9. 2020பரா ஒலிம்பிக் போட்டிகள் எங்கே நடைபெற உள்ளன?
10. அணுகு வசதியின் நான்கு வகைகளும் எவை?

**இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை கீழ் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதி அனுப்புங்கள். இப் படிவத்தில் எழுதி அனுப்பி வைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.**

**விடைகளை 31.07.2017 க்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவையுங்கள். சரியான விடை-களை எழுதி அனுப்பும் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.**

## போட்டி இல. 12 வெற்றியாளர்கள்

செல்வன் ச.ஜதுகுலன்
வராஹி அம்மன் கோயில்வீதி,
கொக்குவில்.

விடைகள் போட்டி இல. 14

## எழுதுங்கள் வெல்லுங்கள்

01.................................................................................

02.................................................................................

03.................................................................................

04.................................................................................

05.................................................................................

06.................................................................................

07.................................................................................

08.................................................................................

09.................................................................................

10.................................................................................

1. முழுப் பெயர்: ..........................................................

2. தபால் முகவரி: ..........................................................

3. தொலைபேசி இலக்கம் ..........................................................

4. பிறந்த ஆண்டு, மாதம், திகதி ..........................................................

**போட்டி இல - 13 விடைகள்**

1. 1987 நவம்பர் 14
2. பர்மா
3. 60 ஆண்டுகள்
4. வேகா
5. இந்தியாவின் டெல்லியில்
6. லார்ட் நெல்சன்
7. ஜெசிக்கா ஹொக்ஸ்
8. ஏப்ரல் - 02
9. 76வது இடம்
10. 12.7%

அனுப்ப வேண்டிய முகவரி :
எழுதுங்கள் வெல்லுங்கள்
கருவி
மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்
இல.1166/15 அருளம்பலம் வீதி.
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

# Citypak

**The Domestic Delivery Company**

# சிற்றிபாக்

உள்ளூர் கடித, ஆவண, பார்சல்
துரித சேவை

இலங்கையில் எந்தப் பகுதியானாலும் விரைவான சேவையை வழங்குகிறோம்.
நீங்கள் குறிப்பிடுகின்ற முகவரியில் ஒப்படைக்கப்படும். ஒப்படைத்ததற்கான ஆதாரத்தை
எங்கள் இணையத் தளத்தில் பார்வையிடலாம்.

## IML DELIVERY SYSTEMS (PVT) LTD

209/2, Union Place, Colombo 02.
Tel: 0114 - 703900 e mail : billing@citypak.lk
Web: www.citypak.lk

## DOOR - TO - DOOR ISLAND WIDE DELIVERY SERVICE

Time - Definite Express Service
Widest Range of Service Options
Easy Tracking and Proof of Delivery



Branches :
Anuradhapura, Avissawella,
Ampara, Biyagama, Bandarawela,
Batticaloa,Dambulla, Galle, Hambantota
Jaffna, Kandy, Kurunegala, Katunayake,
Kegalle Kalutara, Marawilla,
Matara, Pollonnaruwa, Ratmalana,
Ratnapura, Trincomalee, Vavuniya,
Wattala, Yakkala.

**JAFFNA Branch :**
Hospital Road, Jaffna
Tel. 021 - 222 4593




ISSN 2513-2989
9 772513 298007

விலை - ரூபா 100

தேவி Printers
140/1, Manipay Road, Jaffna.
021 300 3030